வியாபாரம் பெருக விளம்பரம் செய்க !

www.nilafrance.com

# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு
(4000 பிரதிகள்)

தை - மாசி 2014 | எமது அச்சகத்தின் ஓர் விளம்பர வெளியீடு | இல. 25



## •2013



கடந்த ஆண்டு, பிரான்ஸ் மக்களுக்கு பெரும் அதிர்வுகளை ஏற்படுத்திய முக்கிய ஆண்டாக கருதப்படுகிறது.

நெல்சன் மண்டேலாவின் மரணமும் ஒரு பாலினத் திருமணச் சட்ட மூலமும் – அதற்கெதிரான போராட்டங்களும் கடந்தஆண்டு பிரான்சில் முன்னிலைவகித்த நிகழ்வுகளுள் முக்கியமானவையாக புள்ளிவிபரக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. தவிரவும்,



- வேலைவாய்ப்பின்மை, அரச எதிர்ப்புப் போராட்டங்கள்
- பாடசாலை கால அட்டவணை தொடர்பான மாற்றங்கள்
- 'roms' மக்களைத் திருப்பியனுப்புதல்,
- நீதித்துறை அமைச்சர் Christiane Taubira மீதான இனவெறித்தாக்குதல்
- கொசோவோ நாட்டுக்கு திருப்பியனுப்பப்பட்ட Leonarda விவகாரம்
- வரவு செலவு அமைச்சர் Jérome Cahuzac இன் சட்டத்திற்குப் புறம்பான சுவிஸ் வங்கிக்கணக்கு
- அரசு அமுல்படுத்த முற்பட்ட Ecotaxe க்கு எதிரான 'Bonnets Rouges' எதிர்ப்புப் போராட்டங்கள்,
- மாலி மற்றும் ஆபிரிக்கக் குடியரசு மீதான இராணுவ நடவடிக்கைகள்.
- Brétigny-sur-Orge புகையிரத விபத்து









- வரிச்சுமையால் குடியுரிமை துறந்து நாட்டை விட்டு வெளியேறிய Depardieu விவகாரம்,
- மார்சே நகரில் தொடர்ந்த பழிவாங்கல் – கொலைகள்,
- குதிரை இறைச்சிக் கலப்படம்.
- பலத்த போராட்டங்களுக்குப் பின்னர் 2014 உலகக் கோப்பை தொடருக்குத் தெரிவான பிரான்ஸ் உதைபந்தாட்ட அணி,
- முழு மறைப்பு அங்கியணிந்த

## பிரான்சில் பரபரப்பாக பேசப்பட்டமனிதர்கள்...

நிலா
தொடர்புகளுக்கு :
சங்கீதா அச்சகம்
39, Bld de la Chapelle - 75010 PARIS (Métro : La Chapelle)
Tél./ Fax: 01. 44. 72. 08. 94 E-mail : sangeethafrance@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியப் பெண்மீது மேற்கொள்ளப்பட்ட அடையாளச் சோதனை, அதைத்தொடர்ந்து Trappes நகரில் ஏற்பட்ட கலவரம்,

- பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து விடுதலையான பணயக் கைதிகள்,
- கடும் உழைப்பின் பலனாக வெற்றியீட்டிய செயற்கை இருதய மாற்றம்,
- சினிமாத்துறையில் 'La vie d'adéle'. ஒரு பாலின உணர்வாளர்களின் உணர்வைப் பேசும் திரைப்படம் பல விருதுகளை பெற்று மக்கள் மத்தியிலும், விமர்சகர்கள் மத்தியிலும் பெற்றுக் கொண்ட வரவேற்பு,
- தொலைக்காட்சி ரியாலிட்டி நிகழ்ச்சிப் பிரபலமான ' Nabilla' வரையிலான நிகழ்வுகள்

பிரான்ஸ் மக்களையும், செய்தித்துறையினரையும் அதிகம் ஆக்கிரமித்த நிகழ்வுகளாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

## 2013ம் ஆண்டு பிரான்சில் ஆதிக்கம் செலுத்திய சிலர்.



### STROMAE : un Phénomène Formidable

இணையவழியாக பாடல்களின் தரவிறக்கங்கள் ஆரம்பித்த பின்னர் இசைத்தட்டு விற்பனை உலகளவில் தொடர் வீழ்ச்சியை சந்தித்தது. ஆனால், மாறாக, பிரான்சில் 2013ம் ஆண்டு இசைத்தட்டு விற்பனை உச்சத்தை அடைந்தது. மில்லியனுக்கும் அதிகமான இசைத்தட்டுக்கள் விற்றுத் தீர்க்கப்பட்டன.

பிரான்சில் இந்த ஏறுமுகத்திற்கு இரு ஆளுமைகள் முக்கியமாக கொண்டாடப்படுகிறார்கள்.

ஒருவர், ஒரு மில்லியனுக்கும் அதிகமான இசைத்தட்டுகளை விற்றுத்தள்ளியுள்ள Stromae . அடுத்த ஆளுமை உலகளவில் எலக்ரோனிக் இசையின் மேதைகள் என வர்ணிக்கப்படும் Daft Punk . இசையுலகின் சிறந்த மனிதராக Stromae பிரான்சில் கொண்டாடப்படுகிறார். 25 வயது இளைஞனான இவர் 2009ல் Alors on danse பாடல் மூலம் 15க்கும் மேற்பட்ட நாடுகளின் நடன அரங்குகளை அதிர வைத்தவர். இப்போது தனது இரண்டாவது இசை அல்பத்தின் மூலம் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளார். Hip hop இசை, எலக்ரோனிக் இசை மற்றும் பிரெஞ்சு மொழி பாடல்கள் ஆகிய மூன்று வெவ்வேறு இசையின் பிரத்தியேகக் கலவையே இவரது இசைக்கு புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளது. இந்த புதிய இசை வடிவத்தையே பிரான்ஸ் மக்கள் கொண்டாடுகிறார்கள் Stromae என்பதை தலைகீழாக மாற்றிப் போட்டால் Maestro. Maestro என்றால் இசைமேதை என்று பொருள்.



Daft punk



### Franck Ribéry

ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஐரோப்பாவின் சிறந்த விளையாட்டு வீரர் பட்டம் வென்ற பிரான்ஸ் வீரர். இவர் விளையாடும் கழகத்திற்காக மூன்று பட்டங்களை வென்றிருப்பது இவரது சிறப்பு. பிரான்ஸ் அணி உலகக்கோப்பைக்கு தெரிவாவதற்கும் இவரின் பங்கு முக்கியமானது என பிரான்ஸ் மக்களாலும் வீரர்களாலும் கொண்டாடப்படுகின்றார். உதைபந்தாட்டத்திற்கான அதியுயர் விருதான Ballon d'or விருதுக்கும் தெரிவாகியிருந்தவர். கடைசி நேரத்தில் போர்த்துக்கல் வீரர் றொனால்டோவாலும் ஆர்ஜென்டீனா வீரர் மெசியாலும் பின்தள்ளப்பட்டார். ஆயினும் மக்கள் இவரின் முழுத் திறமையையும் உலகக்கோப்பைப் போட்டிகளில் எதிர்பார்த்துக் காத்துள்ளனர்.



### Christiane Taubira

பிரான்ஸ் அரசின் முக்கிய ஆளுமையான இவர் நீதித்துறை அமைச்சர் பதவிக்கு வந்து சில காலங்களிலேயே ஒரு பாலினத் திருமணச்சட்ட அமுலாக்கம் மூலம் பலரையும் திரும்பிப் பார்க்க வைத்தவர். இவருக்கு எதிரான இன வெறித்தாக்குதல்களை மிகவும் சாமர்த்தியமாக கையாண்டு நிமிர்ந்து நின்றார். ELLE வார இதழின் 2013 ற்கான பிரான்சின் சிறந்த பெண்மணி அந்தஸ்தையும் பெற்றார். அரசியல் பெண்மணிகளுக்கு இநத அந்தஸ்து ELLE இதழால் கொடுக்கப்படுவது மிக அரிது. பிரான்ஸ் அரசியலில் இவரது இருப்பு பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இனவெறித் தாக்குதலுக்கோ பாலியல் தாக்குதல்களுக்கோ அல்லது முட்டாள்த்தனமான கருத்துகளுக்கோ ஒரு போதும் அஞ்சமாட்டேன் என உறுதியாய் எழுந்து நிற்கிறார் இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரான்சில்

## வீடுகளின் விலை குறைகிறது!

வீட்டுக் கடன்களிற்கான வட்டிவீதம் குறைவாக உள்ளதால் 2013 இல் வீட்டு விற்பனைகளில் சிறிது அதிகரிப்புக் காணப்பட்டுள்ளது. 2012ம் ஆண்டை விட 2013ம் ஆண்டில் வீடுகள், கட்டிடங்களின் விலை 3.9% இனால் இறங்கியுள்ளது.

இத்தகவல்களை Century 21 என்ற கட்டிட விற்பனை நிறுவனம் தனது வருடாந்த நிதி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. இந் நிறுவனம் பிரான்ஸ் முழுவதும் 900 கிளைகளைக் கொண்டுள்ளது. பாரிசில் சராசரியாக ஒரு சதுரமீற்றரின் விலை 8190€ ஆகவும் ஏனைய இடங்களில் சராசரி 2568€ ஆகவும் இருந்துள்ளது. பிரான்ஸ் முழுவதற்குமான சராசரி விலையில் 2013 ம் ஆண்டில் 1.8% விலைக் குறைவு இருந்துள்ளதாகவும் இந் நிறுவனம் தெரிவித்துள்ளது.



## வன்சன் மிருகக்காட்சிச்சாலை

◆ 2008 முதல் மூடப்பட்டிருந்த பாரிஸ் வன்சனில் அமைந்துள்ள விலங்கியல் மிருகக்காட்சிசாலை 12 ஏப்ரல் முதல் திறக்கப்படவுள்ளது. யானை, ஒட்டகச்சிவிங்கி, சிறுத்தை உட்பட 176 வகை காட்டு விலங்குகளை இங்கு காண முடியும்.



## Les Halls வணிக மையம்

◆ இந்த வருட இறுதிக்குள் பாரிசின் நடுப்பகுதியில் அமைந்துள்ள Les Halles கட்டுமானப்பணிகள் முற்றுப்பெறவுள்ளன. 2.5 கெக்ரர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த வணிக மையம், முற்றிலும் ஒளி புகும் வண்ணம் கண்ணாடியிலான கூரையுடன் முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வணிக மையத்தில் விரைவில் 'சொப்பிங்' செய்யலாம்.

## Louis Vuitton

LOUIS VUITTON

◆ கட்டிடக்கலையின் உச்சம் என வர்ணிக்கப்படும் Louis Vuitton அமைப்பின் பொதுக்கட்டடம், கலை வடிவங்களுக்கான ஒரு பொது இடமான 846 கெக்ரர் பரப்பளவில் பிரமாண்டமான செயற்கை நீர்வீழ்ச்சியுடன் பிரான்ஸ் மக்களையும், உல்லாசப்பயணிகளையும், தன்வசம் சுண்டி இழுக்கவுள்ளது.

## பிரான்சில் 3 கோடி மக்கள் வீடியோ விளையாட்டில்...



**பிரான்சில்** 31 மில்லியன் மக்கள் 'வீடியோ கேம்ஸ்' விளையாடுபவர்களாக உள்ளனர். சோனி (Sony) நிறுவனத்தின் (Playstation) பிளேஸ்டேசன்–4, மைக்கிறோசொப்ற் (Microsoft) நிறுவனத்தின் எக்ஸ்பொக்ஸ் வன் (X Box One) போன்றவை 2013 இறுதியில் வெளியிடப்பட்ட பிரசித்தி பெற்ற விடியோ விளையாட்டுகளாகும்.(முனையங்கள்)

1980 ம் ஆண்டுகளில் இருந்து வெளிவந்த இவ் விளையாட்டுக்கள் தற்போது சிறுவர்களை மாத்திரமல்லாமல் பெரியோர்களையும் ஆட்கொண்டுள்ளது. பிரான்சில் வீடியோ விளையாட்டுகளிற்கு அடிமையானவர்களுள் 61% ஆனோர் மாதாந்தம் சராசரியாக 50 யூரோக்களை இதற்காக செலவிடுகின்றனர். இவ் விளையாட்டுக்களில் ஆண் பெண் இருபாலரும் வேறுபாடின்றி ஈடுபடுகின்றமையால் தயாரிப்பு நிறுவனங்களின் வளர்ச்சி விண்ணைத் தொட்ட வண்ணம் உள்ளது.

பிரான்சில் மாத்திரம் இதன் வர்த்தகம் (250 கோடி) 2.5 மில்லியாட் யூரோக்களாக இருந்துள்ளது. 5 வருடங்களிற்கு முன்னர் 37% ஆன வீடுகளில் இருந்த இவ் விளையாட்டுக்கள் 2012 இல் 51% ஆன வீடுகளில் பாவனையில் இருந்துள்ளன. இத்தகவல்களை தேசிய வீடியோ விளையாட்டுச்சங்கம் (Syndicat National du Jeu Vidéo SNJV) என்கின்ற அமைப்புத் தெரிவித்துள்ளது.



**வருடா** வருடம் Time இதழ் அந்த ஆண்டிற்கான சிறப்பு மனிதர்களின் பட்டியலை வெளியிட்டு வருகிறது. இம்முறை கத்தோலிக்க தேவாலயங்களின் தலைவர், புனித பாப்பரசர் பிரான்ஸிஸ் Time இதழின் முதலாவது சிறப்புமனிதராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். உலகமயமாக்கம், உலகத்தரப்பில் பெண்ணின் பாத்திரம், திருமணங்களின் இயல்பு என பல்வேறு விடயங்களில் இவரின் பார்வை மற்றும் வெளிப்படையான கருத்துக்கள் என்பன கத்தோலிக்கர்களை மட்டுமல்லாது பல்வேறுதரப்பட்ட மக்களையும் இவர் பால் திருப்பியுள்ளது என Time இதழ் தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# • துயர் பகிர்வு •



அமரர்
**சண்முகலிங்கம் விஜயகுமார்**
(அரியாலை, கச்சேரி)
தோற்றம் : 24. 05. 1963
மறைவு : 11. 11. 2013



அமரர்
**தம்பு குகநாதன்**
(வேலணை கிழக்கு)
தோற்றம் : 20. 09. 1954
மறைவு : 30. 11. 2013



அமரர்
**மலர்வண்ணன் கஜிந்தா**
(நயினாதீவு 6ம் வட்டாரம்)
தோற்றம் : 08.11.1998
மறைவு : 03.12. 2013



அமரர்
**துரைராஜா நிரஞ்சன்**
(மல்வாவி)
தோற்றம் : 30. 05. 1973
மறைவு : 08.12. 2013



அமரர்
**வரதராஜா நேசரத்தினம்**
(உருத்திரபுரம்)
தோற்றம் : 07. 01.1945
மறைவு : 08.12. 2013



அமரர்
**கதிர்காமு வள்ளியம்மை**
(இளவாலை)
தோற்றம் : 16.12.1937
மறைவு : 14.12. 2013



அமரர்
**நவரட்ணம் சந்திரகலா**
(புங்குடுதீவு 3ம் வட்டாரம்)
தோற்றம் : 11.10.1959
மறைவு : 15.12. 2013



அமரர்
**அருணாசலம் நமசிவாயம்**
(திருநெல்வேலி, நல்லூர்)
தோற்றம் : 17. 02.1925
மறைவு : 17.12. 2013



அமரர்
**சிவப்பிரகாசம் ஆனந்தகோபால்**
(வவுனியா)
தோற்றம் : 26. 07.1952
மறைவு : 31.12. 2013




அமரர்
**சோதிநாகரட்ணம் நரசிங்கமூர்த்தி**
(யாழ்ப்பாணம்)
தோற்றம் : 03. 06.1934
மறைவு : 18. 01. 2014



அமரர்
**ஆறுமுகம் ஐயாத்துரை**
(வட்டுக்கோட்டை)
தோற்றம் : 26. 09. 1927
மறைவு : 20. 01. 2014

## நிலா குறுக்கெழுத்துப் போட்டி - 09



**மேலிருந்து கீழ்**

1. கேரளாவில் பெரும்பான்மையாகப் பேசப்படும் மொழி (5)
2. ...இது உயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும் நெல் உயரக் குடி உயரும் குடி உயர கோன் உயரும் என ஔவையார் பாடியுள்ளார் (4)
3. ஒரு பாடலில் பல்லவிக்கு பின்னர் பாடப்படுவது (4)
4. கள்ளம் ... அறியாதவன் என்பார்கள் (4)
5. பிரசாந்தின் தந்தை தியாகராஜன் நடித்துப் பிரபலமான திரைப்படம் மலையூர் ...(7)
9. கழுத்தோடு ஒட்டியவாறு அணியப்படும் பெரும்பாலும் கற்கள் பதிக்கப்பட்ட நகை (4)
10. 'Vin' ஐ திராட்சை....... என்றும் சொல்லலாம் (3)
11. மரம் அல்லது இரும்பினால் செய்யப்பட்ட பண்டையகால ஆயுதம். இது எறிதல் ஒரு தடகள விளையாட்டாகும் (3)
14. இது ஒரு பண்டைய இசைக்கருவி. நரம்பு இசைக்கருவியாகும் (2)

**இடமிருந்து வலம்**

1. ஈழத்து எழுத்தாளர் எஸ். பொ தமிழில் மொழிபெயர்த்த சிங்களர் கதை (5)
3. இசையின் ஏழு சுரங்களில் முதல் நான்கு சுரங்கள் (4)
6. ஏழாம் நூற்றாண்டுக் காதல் காவியத்தில் மஜ்னுவின் காதலி (2)
7. 'வாள்' இதை இப்படியும் சொல்லலாம் (4)
8. இலங்கை தீவின் வடக்கில் அமைந்துள்ள பாணன் பாடிப் பரிசு பெற்ற நகரம் (6)
9. இந்து சமயத்தில் விஷ்ணு தர்மத்தை நிலைநாட்ட பத்து .... எடுத்ததாகக் கூறப்படுகிறது (5)
12. கீரை வகைகளில் ஒன்று (3)
13. பெண்கள் இடுப்பில் அணியும் ஒரு ஆபரணம் (6)
15. உப்பு தூவப்பட்டு வெயிலில் உலர்த்தப்பட்ட மீன் மற்றும் கடல்வாழ் உயிரினங்களைக் குறிக்கும் (4)

✔ உங்கள் பதில்களை 10 மார்ச் 2014 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்
✔ சரியான பதில்கள் எழுதியவர்களில் மூவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

● குறுக்கெழுத்துப் போட்டி இல.8 இல் ஏற்பட்ட சிறு தவறுக்கு வருந்துகிறோம். இடமிருந்து வலம் 5 தவறுதலாக 4 என பிரசுரமாகியிருந்தது.
-நிலா-

● சரியான விடை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்
● சரியான விடையை அனுப்பியவர்களின் முழு விபரங்களையும் www.nilafrance.com இல் பார்க்க முடியும்.

**பரிசில்களை சங்கீதா அச்சகத்தில் நேரில் வந்து நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்!**

• அனுப்ப வேண்டிய முகவரி •
**NILA**, 39, Bd. de la Chapelle - 75010 PARIS

# பாரிஸ் 18 இல் இஸ்லாமிய கலாச்சார நிலையம்



பாரிஸ் நகரில் ( 56, rue Stephenson 18e ) இஸ்லாமிய, கலாச்சார நிலையம் 2013ம் ஆண்டின் இறுதியில் பாரிஸ் நகரபிதா பேர்த்தரண்ட தெலநுஆ ( Bertrand Delanoë) அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய மக்கள் செறிந்து வாழும் ஓர் பகுதியாக பாரிஸ் 18ம் வட்டாரம் அமைந்துள்ளது.


போதிய இடவசதிகள் இல்லாத நிலையில் பாரிஸ் 18 பகுதியின் குறிப்பிட்ட சில வீதிகளில் முஸ்லிம் மக்கள் தங்கள் தொழுகைகளை நடாத்தி வந்துள்ளனர். இவ்விடயம் பாரிஸ் 18 வாழ் மக்களிடையே சர்ச்சைக்குரிய விடயமாக இருந்துள்ளது.

தற்போது அமைந்துள்ள இக் கலாச்சார மையம் ஐந்து தளங்களைக்கொண்டது. இங்கு நவீன கலைக் காட்சியகம், நிழற்படக் காட்சியகம் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த இஸ்லாமிய கலாச்சார மையத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப்பேசிய பாரிஸ் நகரபிதா, பாரிசில் இஸ்லாமிய கலாச்சாரத்தின் பெறுமானங்களைப் புரிந்துகொள்வதற்கும் பகிர்ந்துகொள்வதற்கும் ஓர் இடம் தேவையாக இருந்தது. அது இப்போது நிறைவேறியுள்ளது என கருத்து தெரிவித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயற்கை மனித இதயம்
## பிரான்ஸ் மருத்துவர்கள் சாதனை!

**உலகத்திலேயே** முதன் முதலாக பிரான்சில் தானியங்கியாகச் செயற்படக்கூடிய இருதயம் மனிதனுக்கு பொருத்தப்பட்டு பிரான்ஸ் மருத்துவர்கள் வெற்றி வாகை சூடியுள்ளனர். 25 வருடக் கடின உழைப்பின் பயனாக பேராசிரியர் Alain Carpentier இச் சாதனையை நிலைநாட்டியுள்ளார். கடந்த 10 வருடங்களில் பல இருதயங்களை தற்காலிகமாக இயங்கவைக்கக் கூடிய கருவிகள் இணைக்கப்பட்டு வெற்றிகள் காணப்பட்டுள்ளன. ஆனால் தற்போது பொருத்தப்பட்டுள்ளது மனித இருதயம் போன்று இயங்கக் கூடிய பண்புகள் கொண்ட முற்றிலும் செயற்கையான இருதயமாகும். 900 கிராம் நிறையுடைய இருதய இயந்திரம் Carmat நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. இச் செயற்கை இருதயம் மனித இருதயத்திலும் பார்க்க 600 கிராம் அதிகமானதாகும். மேலும் உடலில் இணைக்கப்பட்டுள்ள வேறு சில கருவிகளின் உதவியுடன் இதயத் துடிப்பு வேகத்தை தேவைக்கேற்ப கூட்டியோ, குறைத்தோ செயற்படும் வல்லமை வாய்ந்தது, குறைந்தது ஐந்து வருடங்கள் வரை மனித ஆயுளை நீடிக்கவல்லது.


எண்பது வயதாகும் பிரான்சைச் சேர்ந்த பேராசிரியர் Alain Carpentier மருத்துவ உலகில் மிகவும் பிரபலமானவர். 1968ல் இதய வால்பு மாற்றுத்திசுக்களைக் கண்டுபிடித்து சாதனைகள் புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இதயமாற்றுச் சத்திரசிகிச்சை பாரிசில் அமைந்துள்ள Hôpital Européen Georges - Pompidou வில் மேற்கொள்ளப்பட்டது.

எதிர்வரும் வாரங்களில் மேலும் சில மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெற வாய்ப்புகள் உள்ளன எனத் தெரிவித்த பேராசிரியர், பிரான்ஸ் தவிர்த்து போலந்து, பெல்ஜியம், சொலாவேனியா மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளிலும் இவ் அறுவை சிகிச்சைக்குத் தகைமை வாய்ந்த மருத்துவ நிலையங்கள் உள்ளதால் அங்கும் அறுவை சிகிச்சை நடைபெற வாய்ப்புள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதுவரை பரீட்சார்த்த முறையில் மிருகங்களில் மட்டுமே மேற்கொள்ளப்பட்ட இவ் இதய மாற்று அறுவை சிகிச்சை மனிதனில் மேற்கொள்ள கடந்த செப்டெம்பர் மாதத்தில் தான் பிரான்ஸ் சுகாதார மையம் அனுமதி வழங்கியிருந்தது. மூன்று மாத காலங்களிலேயே வெற்றி வாகை சூடியுள்ளனர். இது பிரான்சிற்கு மிகவும் பெருமையான விடயம் எனச்சுகாதார அமைச்சர் Marisol Touraine தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மட்டும் ஒரு லட்சத்திற்கு அதிகமான நோயாளிகள் இதயமாற்றுச்சிகிச்சைக்காக காத்திருக்கின்றனர். செயற்கை இதயத்தின் வெற்றி தொடரும் பட்சத்தில் பல ஆயிரம் மக்கள் இதன் மூலம் பயனடையவுள்ளனர். இப்பொழுது பொருத்தப்பட்டுள்ள இருதயம் 70 சத வீதம் ஆண்களின் மார்புப் பகுதிக்கும் (Thorax) 25 சதவீதம் பெண்களின் மார்புப் பகுதிக்கும் பொருந்தக் கூடியது. இம் மாற்று சிகிச்சைக்குத் தற்போதைய செலவீனமாக 160000 யூரோக்கள் கணக்கிடப்பட்டுள்ளது.

என்னதான் இருந்தாலும் இவ் இருதய மாற்று சிகிச்சை ஒரு முதல் பரீட்சையே. ஒரு முழுமையான வெற்றியை நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என Carmat நிறுவன இணைத்தலைவர் தெரிவித்துள்ளார்.


சங்கீதா அச்சகம்
39, Bd de la Chapelle - 75010 PARIS Tél. : 01 44 72 08 94


## சகல கைத்தொலைபேசிகளுக்கும் பொது சார்ஜர்!

**உலகச்சந்தையில்** நாளுக்கு நாள் புதிய வகைக் கைத்தொலைபேசிகள் அறிமுகமாகிய வண்ணம் உள்ளன. நாமும் புதிது புதிதாக மாற்றிய வண்ணமுள்ளோம். ஒவ்வொரு முறை மாற்றும் போதும் அவற்றிற்கான பிரத்தியேகமான வெவ்வேறு சார்ஜர்கள் விற்கப்படுகின்றன. ஒரு கைத்தொலைபேசிச் சார்ஜரால் இன்னொருவகை கைத்தொலைபேசியை சார்ஜ் செய்ய முடியாது. இது நாம் அறிந்ததே. இவ்வாறு தேவையில்லாது அதிகரித்து வரும் எலக்ரோனிக் குப்பைகளைக் குறைக்க வேண்டுமென சூழல் பாதுகாப்பு அமைப்புகள் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தன. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு ஐரோப்பிய ஒன்றிய ஆலோசனைக்குழுவின் குரலுக்கு ஐரோப்பியப் பாராளுமன்றம் செவிமடுத்துள்ளது.

வரும் காலங்களில் Apple கைத்தொலைபேசி நிறுவனம் உட்பட சகல கைத்தொலைபேசித் தயாரிப்பு நிறுவனங்களும் பொது சார்ஜர்கள், மற்றும் மின்கலங்களை தயாரிக்க நிர்ப்பந்திக்கப்படவுள்ளன. இம்முறை சட்டமூலமாக வலியுறுத்தப்படவுள்ளது. இதன்மூலம் பயனீட்டாளர்களின் அதீத செலவீனங்களையும், பூமி அதீதமான 50000 தொன் எலக்ரோனிக் குப்பைகளையும் தவிர்க்க முடியுமென ஐரோப்பியப் பாராளுமன்றம் தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மத்திய ஆபிரிக்கக் குடியரசும்

## வண்ணத்துப்பூச்சி அறுவைச்சிகிச்சையும்

**மத்திய ஆபிரிக்கக் குடியரசு.** ஆபிரிக்கக் கண்டத்தில் மேற்கே கமரூன், வடக்கே சாட், கிழக்கே சூடான், தெற்கே கொங்கோ சூழ நடுவில் உள்ளது. 1910 முதல் பிரான்சின் கொலனியாக இருந்தது. 1960ல் பிரான்சிடமிருந்து முழுமையாக விடுதலையடைந்தது. 1993 வரை ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்படாத அதிபர்களால் ஆட்சி செய்யப்பட்ட நாடு, 1993ல் உலக நாடுகளின் அழுத்தத்தில் தேர்தல் நடாத்தப்பட்டது. 2003ல் ஆட்சியிலிருந்த அதிபர் மக்களின் செல்வாக்கை இழந்தார். இந்நிலையில் பிரான்ஸ் அரச ஆதரவுடன் எடுக்கப்பட்ட இராணுவப்புரட்சி மூலம் பிரான்சுவா போசிசே ஆட்சியைக் கைப்பற்றினார். பின்னர் 2005 தேர்தலிலும் வெற்றியீட்டினார். தொடர் ஊழல், அபிவிருத்தியின்மை, குடும்ப அரசியல் போன்ற காரணங்களால் அதிருப்தியடைந்த மக்கள் கிளர்ச்சியில் இறங்கினர். முதல் உள்நாட்டுப்போர் நாட்டைச் சின்னாபின்னமாக்கியது. 2008ல் சமாதான உடன்படிக்கை அரசுக்கும் போராட்டக் குழுக்களுக்குமிடையில் கையெழுத்திடப்பட்டது. தொடர்ந்தும் அரசின்பாலும் அதிபரின்பாலும் அதிருப்தி வலுக்க ஆயுதக் கிளர்ச்சியாளர்களான சேலேக்காவால் (Séléka) 2013 மார்ச் 24ல் போசிசேயின் அரசு கவிழ்க்கப்பட்டது. அதிபர் நாட்டை விட்டு கமரூனுக்குத் தப்பி ஓடினார்.

மத்திய ஆபிரிக்க குடியரசு ஆபிரிக்கக் கண்டத்தின் மிக வறிய நாடுகளிலொன்றாகும். இங்கு 50 சதவீதத்தினருக்கும் அதிகமானவர்கள் கிறிஸ்தவர்களாகவும், 15 சதவீதத்தினர் இஸ்லாமியர்களாகவும், மீதமானவர்கள் பழங்குடி மதங்களைக்கடைப்பிடிப்பவர்களாகவும் உள்ளனர். ஆயுதம் தாங்கிய போராட்டக் குழுவான செலேக்கா பெரும்பான்மையாக இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுபவர்களாகும். ஆட்சிக் கவிழ்ப்பிற்குப் பின்னர் இவர்களின் அத்துமீறல்கள் நாட்டில் அதிகரித்தது. கிறிஸ்தவ சமூகத்தினர் அடித்துத் துன்புறுத்தப்பட்டு, கொலைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இவர்களுக்கு எதிராக உருவாகிய கிறிஸ்தவ சமூகத்தைச்சேர்ந்த எதிர்ப்புக்குழுவான அன்டிபலாகா (Anti Balaka) இஸ்லாமிய சமூகத்தினரை கொன்றொழித்தது.

கிட்டத்தட்ட ஒரு இன அழிப்பே நடந்தேறிக்கொண்டிருந்த வேளையில் ஆபிரிக்க ஒன்றியத்தின் இராணுவப்படையணி சமாதானத்தை நிலைநாட்ட உள் நுழைந்தது. எந்தவித பலனுமில்லாமல் கொலைகள் தொடர்ந்த வண்ணமேயிருந்தன. 24 செப்டெம்பர் 2013ல் ஐக்கிய நாடுகள் சபையில் பிரான்ஸ் அதிபர் இராணுவப்படைகளை பலப்படுத்த வலியுறுத்தினார். பிரான்ஸ் ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்புதலுக்காகக் காத்திருந்தது. 5 டிசம்பர் 2013ல் 300க்கும் அதிகமானோர் தலைநகரான பாங்கி (Bangi) யில் படுகொலை செய்யப்பட்டனர். மக்கள் எங்கு சென்று ஒழிவதென்று தெரியாமல் அங்கலாய்த்தனர்.
அதேநாளில் சில மணி நேரங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்புதல் பிரான்சிற்கு கிடைத்தது. 6 டிசம்பர் 2013ல் 1600 பேர் கொண்ட பிரான்ஸ் இராணுவப்படையணி தரையிறங்கி தனது பணியை ஆரம்பித்தது. இவர்களின் முக்கிய பணியாக மக்களுக்கான பாதுகாப்பு மற்றும் ஆயுதக்களைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

மத்திய ஆபிரிக்க குடியரசில் பிரான்ஸ் படையினர் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைக்கு வழங்கப்பட்டிருக்கும் பெயர் சங்காரிஸ் (Sangaris) ஆகும். Sangaris ஆபிரிக்கக் காடுகளில் காணப்படும் சிறிய சிகப்பு நிற வண்ணத்துப்பூச்சிகளாகும். வண்ணத்துப்பூச்சிகளின் வாழ்க்கைக்காலம் மிகக் குறுகியது இதைக் கருத்தில் கொண்டே இந் நடவடிக்கைக்கு இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. மத்திய ஆபிரிக்கக் குடியரசில் ஆபிரிக்க ஒன்றிய படைகளுடன் (MISCA) இணைந்து அமைதியை நிலை நாட்ட பிரான்ஸ் படைகளுக்கு அரசு கொடுத்திருக்கும் காலம் 6 மாதங்களாகும்.

இவர்களின் குறுகியகாலப்பணிகளைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படையே (Casque bleus) தொடர் நடவடிக்கைகளில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது. ◆




◆ ஈபிள் கோபுர முதற்தளம் நீண்ட நாட்களாக சீரமைப்புப் பணிகளுக்காக மூடப்பட்டிருந்தது. 2014 நடுப்பகுதிக்குள் பணிகள் முடிவிற்கு வந்து மக்கள் வருகைக்காக திறக்கப்படவுள்ளது. ஈபிள் கோபுரம் வருடத்திற்கு 7 மில்லியன் வருகையாளர்களைக் கொண்டது. சீரமைப்புகளிற்கு பின்னர் முதல் மாடியில் 57 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கண்ணாடியிலான தரையில் நின்று பார்த்தால் அந்தரத்தில் நிற்பது போன்ற உணர்வைத் தரும் என கட்டிட கலைஞர்கள் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வங்கிகள் திவாலாவதைத் தடுக்க ஜேர்மனி - பிரான்ஸ் திட்டம்

**ஜேர்மனியின்** அதிபராக அஞ்ஜெலா மெர்க்கல் ( Angela Merkel ) மூன்றாவது முறையாக கடந்த டிசம்பரில் பதவி ஏற்றுள்ளார். இதன்பின்னர் பிரான்ஸ், ஜேர்மன் தலைவர்கள் பெல்ஜியத்தில் நடைபெற்ற உச்சிமகாநாட்டின் போது சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் உள்ள வங்கிகள் திவாலாகிப் போகாமல் இருக்க, இணைந்து நடவடிக்கை எடுக்க இரு நாட்டுத் தலைவர்களும் இணங்கி உள்ளனர். ஐரோப்பாவின் விதியை நிர்ணயிப்பதில் இரு நாடுகளும் இணைந்து விசேட பொறுப்பை எடுக்க உள்ளனர்.

ஐரோப்பாவில் தற்போது 6000 வரையிலான வங்கிகள் உள்ளன. இங்குள்ள வங்கி ஒன்று பிரச்சினையை எதிர்நோக்கித் திவாலாகும் போது, அதைக் காப்பாற்ற ஏனைய வங்கிகள் முன்வரவேண்டும் என்ற கருத்தை பிரான்ஸ் முன்வைத்துள்ளது. ஆனால் ஐரோப்பிய ரீதியில் முன்னணியில் உள்ள 130 வங்கிகளிற்கு மாத்திரமே தங்கள் ஆதரவை வழங்க முடியும் என ஜேர்மனி தெரிவித்துள்ளது. எனினும் 130 முதல்தர வங்கிகளில் ஏற்படும் பிரச்சனைக்கு தீர்வு கொடுக்க இரு நாட்டுத் தலைவர்களும் இணங்கி உள்ளனர்.

ஜேர்மனி, பிரான்ஸ் தவிர்ந்த மற்றைய ஐரோப்பிய நாடுகள் இவ்விடயத்தைக் கருத்தில் எடுத்து நடைமுறைப்படுத்த பின் நிற்கின்றன. தற்போது LTRO ( Long-Term Refinancing Operations ) என்ற நீண்ட கால மீள் நிதித் திட்டத்தில், ஐரோப்பிய மத்திய வங்கி 1100 மில்லியாட் யூரோக்களை கடந்த மூன்று ஆண்டுகளில் வங்கிகளிற்கு கடனாக வழங்கியுள்ளது. இதில் 353 மில்லியாட் யூரோக்கள் மீளசெலுத்தப்பட்டுள்ளன. 667 மில்லியாட் யூரோக்கள் கடன் திரும்பச் செலுத்தப்படவில்லை.

வங்கிகள் திவாலாகாமல் இருக்க ஜேர்மனி – பிரான்ஸ் எடுக்கும் நடவடிக்கை, ஐரோப்பிய பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையாகப் பார்க்கப்படுகின்றது.



## பிராங்க் நாணயம்

பிரான்சின் நீண்ட நாள் நாணயமான பிராங்க் நாணயம் 5 டிசம்பர் 1360ல் உருவாக்கப்பட்டது. 24 கரட் தங்கத்தினால் உருவாக்கப்பட்ட இந் நாயணம் பிராங்க் அ சிவால் (Franc à cheval) என அழைக்கப்பட்டது.
அக்காலத்தில் பிரான்ஸ் அரசன் இரண்டாவது ஜோன் லு பொன் (Jean II Le Bon) ஆங்கில அரசின் சிறையில் இருந்தான். அவனை மீட்பதற்காக இந்நாணயம் உருவாக்கப்பட்டது.
பின்னர், இது பிரான்சின் தேசிய ஒற்றை நாணயமாக 1795 முதல் புழக்கத்திற்கு வந்தது. அது வரை பல நாணய மற்றும் பண்டமாற்று முறைகள் புழக்கத்திலிருந்தன. பின்னர், யூரோ நாணயத்தின் வருகையுடன் பிராங் நாணயமானது 31 டிசம்பர் 1998 முதல் 600 வருடங்களுக்கு மேலான தனது இருப்பிலிருந்து விடைபெற்றுக்கொண்டது. ஆயினும் இன்றும் பிரான்சில் பெரும் பகுதியினர் பிராங்கில் தான் செலவீனங்களைச் சரிபார்த்துக் கொள்கிறார்கள் என்பதும் சுவாரிசியமான செய்திதான்.

**அனுபவமற்ற கல்வியைவிட**
**கல்வியில்லாத அனுபவம் மேல்**

# வெற்று வாக்குகள்!




சாதாரண வாக்களிப்பின் போது செல்லுபடியான அல்லது செல்லுபடியற்ற வாக்குகள் இருக்கும். பிரான்சில் யாருக்குமே வாக்களிக்காமல் இருக்க விரும்புபவர்கள் புள்ளடி இடாமல் வெற்று வாக்குகள் அளிக்க ஆவன செய்யப்படவுள்ளது.
பிரெஞ்சுப் பாராளுமன்றத்தில் இதற்கான சட்டமூலம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது. கடந்த இருபது ஆண்டுகளாக இந்தச் சட்டமூலத்தைக் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் 'வெற்று வாக்குகள்' அளிப்பதற்கான திட்டம் வெற்றி பெறவில்லை.

2014ம் ஆண்டு பங்குனியில் இடம்பெறவுள்ள நகரசபைத் தேர்தல்களில் இப் புதிய முறை கையாளப்படமாட்டாது. தேர்தல் திணைக்களத்தில் உள்ள கணனிகளின் மென்பொருட்களில் ( Software ) மாற்றங்கள் செய்ய, கால அவகாசம் போதாதென தேர்தல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தற்போது ஐரோப்பாவில் சில நாடுகளில் வெற்று வாக்கு அளிக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. ஸ்பெயின், ஒல்லாந்து ஆகிய இரண்டு நாடுகளில் அனைத்துத் தேர்தல்களிலும் இம்முறை நடைமுறையில் உள்ளன. சுவீடனில் இவ் வாக்களிப்பு முறை சர்வஜன வாக்கெடுப்பிற்கு மாத்திரமே ( Référendum ) நடைமுறையில் இருக்கின்றது. ஐரோப்பாவிற்கு வெளியில் பிறேசில், கொலம்பியா, உருகுவே, பேரு போன்ற தென் அமெரிக்க நாடுகளிலும் இம்முறை நடைமுறையிலுள்ளது.

**Sunraj**
சண்ராஜ் இசைக்குழு
06.51.77.97.32
06.21.12.27.95

கொக்கட்டிச்சோலையில்
ஓர் அறிவாலயம்
www.ariivalayam.com
0094 65 56 83 545


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ் தமிழர் நிகழ்வுகள்

**● வித்தியாலயவிழா**

வேலணை மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் 20 வது ஆண்டு வித்தியாலய விழா 25.11.2013 அன்று பாரிஸ் Marx dormoy மண்டபத்தில் நடைபெற்றது.

**● சென்.ஜேம்ஸ் ஆண்டு விழா**

சென்ஜேம்ஸ் பழைய மாணவர் சங்க பிரெஞ்சுக்கிளையின் ஆண்டு விழா 23.12.2013 அன்று நடைபெற்றது.

**● அரங்காட்டம்**

பிரான்ஸ் தமிழர் கலை கலாச்சார ஒன்றியத்தின் அரங்காட்டம் 22.12.2013 அன்று லாச்சப்பல் தங்கவயல் அரங்கில் நடடைபெற்றது

**● ஒளி விழா**

பிரான்ஸ் ஆன்மீகப்பணியகத்தின் ஒளி விழா 29.12.2013 அன்று பாரிஸ் Marx Dormoy மண்டபத்தில் நடைபெற்றது.

**● நாரந்தனை மக்கள் நல்வாழ்வுச் சங்கம்**

நாரந்தனை மக்கள் நல்வாழ்வுச்சங்கம் நடாத்திய ஒளி விழா 29.12.2013 அன்று கார்ஜ் சார்சலில் நடைபெற்றது.

**● A Gun & A Ring**

கனடாவில் தயாரிக்கப்பட்ட புலம்பெயர் தமிழ்சினிமா A Gun & A Ring 5.01.2014 அன்று பாரிஸ் சாம்செலிஸே திரையரங்கில் திரையிடப்பட்டது.

**● தமிழர் திருநாள்**

சிலம்பு அமைப்பின் எட்டாவது தமிழர் திரு நாள் 19.01.2014 அன்று பாரிஸ் Marx Dormoy மண்டபத்தில் நடைபெற்றது.

● தமிழர் ஒருங்கிணைப்பு குழு, தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு நடாத்திய தமிழர் திருநாள் 19.01.2014 அன்று Sevran மண்டபத்தில் நடைபெற்றது

**● பொங்கல் விழா**

Blanc Mesnil தமிழ்ச் சங்கத்தின் பொங்கல் விழா 18.01.2014 அன்று புளோமினிலில் நடைபெற்றது.

● திருமறைக்கலாமன்றத்தின் பொங்கல்விழா 19.01.2014 அன்று ஒபேவில்லியேயில் நடைபெற்றது

## 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'




உணவுப் பழக்கங்களால் நோய்களைத் தடுத்திட முடியுமா?

**நாள்தோறும் ஐந்து பழங்கள் மற்றும் காய்கறிவகைகளை உண்ணுங்கள்!** என்பது மருத்துவர்களின் அறிவுரை. தாவர உணவுகள் அனைத்து நோய்களுக்குமான மருந்தாக முன் வைக்கப்படுகிறது. எமது உடல் நலத்தைச் சரியான முறையில் பராமரிக்க நார்ச்சத்து இன்றியமையாதது. அதிகளவு மக்கள் பின் பற்றுவதற்காகவே மிகக் குறைந்த பட்சப் பரிந்துரையாக சுகாதாரத் துறையினர் இவ்வறிவுறுத்தலைச் செய்துள்ளனர்.

உடல் எடை கூடியவர்கள் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமே அதிகமாகவுள்ளனர். ஆரோக்கியமற்ற, பொறுப்பற்ற உணவு முறைகள் மற்றும் கொழுப்பு நிறைந்த தொழிற்சாலைத்தயாரிப்பு உணவுகளையே உயிர்வேதியியல் விஞ்ஞானிகள் அதிகம் சாடியுள்ளனர். கொழுப்புக் கூடிய உணவுகளை அதிகம் உண்பதால் உடலில் தங்கும் கொழுப்புகளை கரைப்பதற்கு உடற்பயிற்சி அவசியம். ஆனால் உடற்பயிற்சி செய்வதற்கு யாருக்குத்தான் நேரமிருக்கிறது? இதனால் 40 வயதில் வரக்கூடிய இருதயநோய் 30 வயதில் வந்து தொலைக்கிறது. உடற்பருமன் என்பதுதான் இதயநோய்க்கான முதல் அறிகுறி. ஆனால் இவற்றையெல்லாம் எமது நாளாந்தம் சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய அல்லது பேணக்கூடிய உணவு முறைகளால் தவிர்க்க முடியும் என்று அறிவுரைக்கின்றனர் மருத்துவர்கள்.

**விஞ்ஞானம் பரிந்துரை செய்துள்ள உணவு வகைகளும் அவற்றால் கிடைக்கக் கூடிய பலாபலன்களும் :**

***நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க:***

அல்லியம் (Alliacées) வகைக்காய்கறிகள் : இவை பூண்டு, வெங்காயம், லீக்ஸ் (Poireau) மற்றும் அனைத்து வகைப் பழங்கள் முக்கியமாகக் கிவி, வாழைப்பழம், தோடை, தேசிக்காய். கிழக்காசிய உணவு வகைகளில் அதிகம் காணக்கூடிய கடல் பாசி வகைகள் (Algues) மற்றும் காளான் வகைகள்.

விட்டமின் E மற்றும் C நிறைந்த கிவிப்பழம், B6 விட்டமின் அதிகமான வாழைப்பழம் போன்றவை நோயெதிர்ப்பு மற்றும் தொற்று நோய்த்தடுப்பில் முக்கிய பங்காற்றும் குருதியின் கூறான வெண்குருதியணுக்களின் உற்பத்திக்கு இன்றியமையாதவை. பாசி வகைகளில் காணப்படும் fucoidane மற்றும் பூண்டு வெங்காய வகைகளில் காணப்படும் அல்லிசின் ஆகியவை நோயெதிர்ப்புசக்தியை அதிகரிக்கவல்லவை. மற்றும் சில குறிப்பான காளான் வகைகளான (shiitaké, maitake) போன்றவை சீன மற்றும் ஜப்பானிய மருத்துவத்தின் முக்கிய மூலக்கூறுகளாகும். இவ்வுணவு வகைகளை தொடர்ந்து எமது உணவில் சேர்த்துக் கொண்டால் எமது உடலுக்குத்தேவையான நோயெதிர்ப்பு சக்தி போதிய அளவு கிடைக்குமென்கிறார்கள் விஞ்ஞானிகள்.

(தொடரும்..)

**அஷ்ட லக்சுமி கோயில்** - Choisy-le -Roi

2013

முதன்முறையாக ஆலயத்தில் தியாகராஜர் உற்சவம் நடாத்தப்பெற்றது.
இந்து சமய அறிவுப்போட்டி நடைபெற்றது.
சுவர்க்கதசி ஏகாதாசி அன்று சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது.

**ஐரோப்பிய நேரப்படி கணிக்கப்பெற்ற பஞ்சாங்க கலண்டர் ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்!**

சரிவர ஒரு வேலையைச் செய்ய வேண்டுமாயின் அதை நீயே செய்!

ஏழாலை மக்கள் ஒப்புரவு நற்பணிக் கூடத்தின்

**மணிஓசை**

ஏழ்மைச் சிறார்களின் கல்வி மேம்பாட்டுக்காக நடாத்தப்படும் பல்கலை நிகழ்ச்சி.

9. 3. 2014

50, rue de Torcy - 75018 Paris

தொடர்புகளிற்கு: Star Sri - 06 98 87 96 34
Ranjan - 06 13 37 10 84



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OS+

## OPTICAL SERVICE

மிகக்குறைந்த
விலையில்
தரமான
கண்ணாடிகளை
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்



**உங்களுக்கு வழிகாட்ட**
**தமிழ் மொழி ஆலோசகர்கள்**



Samuel Mariathas
opticien

**தமிழ் மொழிமூலம் தொடர்புகொள்ளும்போது உங்களுக்கு விஷேட சலுகைகள் உண்டு**

12,bis Avenue de Clichy - 75018 Paris
Tél. : 01 44 70 95 61
Clichy@opticalservice.fr


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 வது தடவையாக ஐரோப்பா ரீதியில் நடைபெறும் பாட்டுத்திறன் போட்டி

# ஸ்ருதிலயா வானம்பாடிகள் 2014

## போட்டியின் நிர்வாக விதிமுறைகள் :

**1. வயதெல்லைகள் 01.01.2014ஐ அடிப்படையாகக் கொண்டு ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.**

| | |
|---|---|
| கீழ்ப்பிரிவு | : 10 வயதிற்குற்பட்டோர் (01-01-2004 பின் பிறந்தோர்) |
| மத்தியபிரிவு | : 16 வயதிற்குற்பட்டோர் (01-01-1998 பின் பிறந்தோர்) |
| மேற்ப்பிரிவு | : 26 வயதிற்குற்பட்டோர் (01-01-1988 பின் பிறந்தோர்) |
| அதிமேற்ப்பிரிவு | : 36 வயதிற்குற்பட்டோர் (31-12-1978 பின் பிறந்தோர்) |
| சிறப்புப்பிரிவு | : 36 வயதிற்குமேற்பட்டோர் (31-12-1978 முன் பிறந்தோர்) |

**2. விண்ணப்ப முடிவுத்திகதி : 10.04.2014**

**3. விண்ணப்பக் கட்டணம் : 50€*** (ஒரு குடும்பத்தில் பலர் பங்கு பற்றுவதானால் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்)

**4. நிறைவுச்சுற்றில் வெற்றி பெறும் அனைத்துப் பிரிவினருக்கும் முறையே :**

**1ம் இடம் – 500€ 2ம் இடம் – 300€ 3ம் இடம் – 200€**

**பணப்பரிசாக வழங்கப்படுவதோடு 'சுருதிலயா வானம்பாடி – 2014' எனும் விருது வழங்கி மதிப்பளிக்கப்படும்.**

**இத்துடன் கலையகச்சுற்றிலிருந்து நிறைவுச்சுற்று வரை போட்டியிட்ட போட்டியாளர்க்கான சிறப்பு தகுதி விருதுகள்வழங்கப்படும்.**
**தெரிவுப் போட்டி நடைபெறும் நாள் : பிரான்சு : 20.04.2014 / இடம் : பின்னர் அறிவிக்கப்படும்**
**மேலதிக விபரங்களுக்கு : பிரான்சு : 07 82 37 96 05 அல்லது 06 10 51 24 13**

போட்டியின் விதிமுறைகள் :

1. தமிழ்த்திரையிசைப்பாடல்களைப் பாடும் திறன் கொண்டிருத்தல் வேண்டும்.
2. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
3. தெரிவுப்போட்டியின் பெறுபேறுகளைப் பொறுத்தே கலையகச்சுற்றுக்கு அனுமதி வழங்கப்படும்.
4. கலையகச்சுற்றுக்குத் தகுதி அடைந்தவர்கள் பாடற்பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொள்ளுதல் அவசியம். பயிற்சிப் பட்டறை தமிழகத்து மற்றும் புலம்பேர் வாழ் பிரபல பாடகர்கள் மூலம் வழங்கப்படும்.
5. பயிற்சிப் பட்டறைகள் மூன்று நாட்கள் நடை பெறும்.
6. கலையகச்சுற்றில் மூன்று வித்தியாசமான சுற்றுக்களில் போட்டியிட வேண்டும். (வேகமான மேலோடி. வேகம் குறைந்த மேலோடி மற்றும் மேற்கதேய இசை வடிவான பாடல்)
7. நிறைவுச்சுற்றுக்கு ஒவ்வொரு பிரிவிலிருந்து தெரிவாகும் ஐந்து போட்டியாளர்கள் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படும்.

**பயிற்சிப் பட்டறை : 15, 16, 17 ஒக்ரோபர்-2014 /கலையகச்சுற்று : 18, 19, 20, 21 ஒக்ரோபர்-2014 / நிறைவுச்சுற்று : 25-10-2014 (இடம் : *THEATRE LONGJUMEAU*)**

விண்ணப்ப படிவத்தினை நேரடியாக லாச்சப்பலில் அமைந்துள்ள போண் -2000 (Phone-2000, 2 rue Perdonnet, 75010 PARIS) லில் கையளிக்கலாம்.
அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் :

Shruthilayah Musique studio, 35, rue des Mimosas, 77400 Lagny sur Marne France

---

**விண்ணப்பப் படிவம்**

விண்ணப்பிக்கும் பிரிவு : கீழ் பிரிவு ○ மத்திய பிரிவு ○ மேற்ப்பிரிவு ○ அதிமேற்ப்பிரிவு ○ சிறப்புப்பிரிவு ○

போட்டியாளரின் தந்தையின் பெயர் :......................................................

போட்டியாளரின் பெயர் :......................................................

பிறந்த திகதி :......................................................

முகவரி :......................................................

மின்னஞ்சல் :......................................................

செல்லிடப்பேசி :...................................... வீட்டுத் தொலைபேசி :......................................



**Tel: 07 82 37 96 05 (Thamilchelvan) ou 06 10 51 24 13 (Anistan) - contact@shruthilayah.com**
**www.shruthilayah.com - Facebook page : Shruthilayah**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபால் அன் கோ

# GOPAL & CO




## மலிவு விற்பனை

| | |
|---|---|
| தேங்காய்ப்பால் பவுடர் (1kg) 1pks ~~8.90€~~ | ➧ 5.90 |
| 7 நெஸ்ரமோல்ட் | ➧ 9.90 |
| 6 ரின்மீன் | ➧ 9.90 |
| மரவள்ளிக்கிழங்கு 1Kg | ➧ 1.29 |
| வாழைக்காய் 1K | ➧ 1.00 |

**இலங்கை,இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறிகள் அனைத்தும் மலிவு விலையில்.....**

## வாடிக்கையாளர் வசதி கருதி ....

**லாச்சப்பலில்...**
**72, Rue Louis Blanc,**
**75010 Paris.**
M°: La Chapelle

**பொபினியில்...**
**205, AV. JEAN JAURES,**
**93000 BOBIGNY.**
Tram 1: La Ferme

**ஸ்ரெலிங்கிராட்டில்..**
**84, Rue de l'Aqueduc**
**75010 Paris.**
M° Stalingrad

ortel MOBILE Lyca mobile
**Lyca SIM**
**Ortel SIM**
~~9.00~~ - 5.00€

**Tél : 01 46 07 11 10 / Fax : 01 46 07 13 03**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரான்சிலும்

# கருணைக் கொலை செய்யலாம்!

குணப்படுத்த முடியாத நோயினால் துன்பப்படும் நோயாளி ஒருவரை சட்டபூர்வமாக கொன்றுவிடுதல் கருணைக்கொலை எனப்படுகிறது. ஐரோப்பாவில் பெல்ஜியம், சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, லக்சம் பேர்க் போன்ற நாடுகளில் கருணைக்கொலை அல்லது மருத்துவரின் உதவியுடனான தற்கொலை போன்றவற்றிற்கு அனுமதி உள்ளது. பிரான்சிலும் இதை ஒத்த சட்டமூலமே கொண்டு வரப்படவுள்ளது.

பிரான்சிலும் கருணைக்கொலை செய்ய, அதற்காக நியமிக்கப்பட்ட 18 பேர் அடங்கிய ஆணைக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

2013 டிசம்பரில் இவ் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கைக்கு பொதுமக்கள் மத்தியில் இருந்து எதிர்ப்பே பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அத்துடன் ஆணைக் குழுவின் கருத்து பிரான்ஸ் மக்களின் கருத்தை பிரதிபலிப்பதாக எடுத்துக் கொள்ள முடியாதெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய பிரெஞ்சு அரசு கோடை கால பாராளுமன்ற அமர்வின் போது கருணைக்கொலைக்கு சட்டவடிவு கொடுப்பதற்கான திட்ட வரைபு வேலைகளில் இறங்கியுள்ளது. பாராளுமன்றத்தினால் இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டாலும் நீதி-நெறிமுறை தவறாது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பதில் தங்களுக்குள்ள ஆதங்கத்தை மக்கள் அமைப்புகள் வெளிப்படுத்திய வண்ணம் உள்ளன.




## எச்சரிக்கை!

ஸ்மார்ட்போன் பாவனை இளையோர்களின் நடத்தையில் எதிர்மறையான மாற்றங்களை ஏற்படுத்துவதாக பல்கலைக்கழக ஆய்வறிக்கையொன்று சுட்டியுள்ளது. இவர்களின் கல்வி வளர்ச்சியிலும் வாழ்க்கை முறையிலும் முற்றிலும் பாதகமான நிலமைகளையே ஏற்படுத்துகின்றது.

ஸ்மார்ட் போன் பாவனையாளர்கள் சிறு பிரச்சினைகளிற்கும் தீர்வு காண்பதில் தத்தளித்தல், மற்றும் அச்சம், மனச் சஞ்சலம், நிம்மதியின்மை, கவனக்குறைவு போன்றவற்றிற்கும் உள்ளாகின்றனர். பெற்றோர் இந்த மாற்றங்களைக் கண்டு உரிய நடவடிக்கை எடுக்கக் காட்டும் தாமதம், இளையோரின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்பு உண்டு எனவும் அறிக்கை மேலும் எச்சரிக்கின்றது.

**கவலைகள் ஒருபோதும் வெற்றியைத் தருவதில்லை முயற்சிகளே!**





# தவறாக சிறைவைக்கப்பட்டவர் 45000 யூரோ நஷ்டஈடு பெற்றார்

தவறு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் 12000 € நஸ்டஈடு வழங்க அரசு முன்வந்தது. ஆனால் கைதுசெய்யப்பட்டவர் 180.000 € நஸ்டஈடு கோரினார். பாரிஸ் உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் மொகமட் கமறா (Mohamed Camara) 5 மாதங்கள் தவறாக சிறைவைக்கப்பட்டதற்கு நஸ்டஈடாக பலத்த போராட்டத்தின் பின்னர் 45000 € பெற்றுக் கொண்டார்.

1973ம் ஆண்டில் பிறந்த முகமட் கமறா தனது 28 வயதில் 2001ம் ஆண்டு அடையாள அட்டை பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டார். மாணவரான இவர், இது சாதாரண நடைமுறையான சோதனை என்றே எண்ணியிருந்தார். ஆனால் சட்ட மீறல் ஒன்றிற்காக ஐரோப்பிய ரீதியில் தேடப்படுகின்ற குற்றவாளி என்ற காரணத்திற்காக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். நான்சி (Nancy) நகரைச் சேர்ந்த இவர் நீதிமன்ற அழைப்பாணையை ஏற்க மறுத்தமை என்ற குற்றஞ்சாட்டில் பொலிசார் கைது செய்தனர். அத்துடன் இரண்டு குழந்தைகளை பாலியல் பலாத்காரம் செய்தமைக்கான 20 ஆண்டு சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது.

சிறையில் அடைக்கப்பட்ட முகமட் கமறா வெளியில் வருவதற்கு 5 மாதம் போராடியுள்ளார். பாலியல் பலாத்காரத்தின் போது எடுக்கப்பட்ட ADN பரிசோதனைக்கும் முகமட் கமறாவின் ADN பரிசோதனைக்கும் இடையில் வேறுபாடு இருந்துள்ளது. ஐந்து மாத போராட்டத்தின் பின்னரே பொலிசார் இப் பரிசோதனைக்கு உடன்பட்டிருந்தனர்.

பெயர் மாறாட்டத்தில் கைதாகிய இவர் 5 மாதத்தின் பின்னர் விடுதலையானார். இவரின் வழக்கு 12 ஆண்டுகள் இழுத்தடிக்கப்பட்டு தற்போது நஸ்டஈடு வழங்கப்பட்டுள்ளது.


**சாவகச்சேரி இந்துக்கல்லூரி ப.மா.சங்கத்தின்**

**தாமோதரகானம்**

**15.3.2014**

**மறைந்த இசைமேதை ரிஎம்எஸ் நினைவு சுமந்த**

**இசை நாதம்**

**31. 05. 2014**

50, Place de Torcy - 75018 PARIS

தொடர்புகளுக்கு : 01.40.37.30.61

பாரிஸ் ஸ்ரீ பத்திரகாளி அம்மா ஆலய நிர்வாகம்

**மகாஜனா ப.மா.சங்கத்தின்**

**குடும்ப ஒன்றுகூடலும் அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பும்**

**16.2.2014**

**சங்கீதா அச்சகம்**

01.44.72.08.94





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐரோப்பிய ஒன்றிய தலைமையை கிறீஸ் (Grèce) பெற்றது.

28 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுள் மிகுந்த பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் கிறீஸ் 08.01.2014 இலிருந்து ஐரோப்பிய ஒன்றியத் தலைமையை ஏற்றுள்ளது. ஐரோப்பாவின் பெருங் கடனாளி யாக தற்போது கிறீஸ் விளங்குகின்றது. கிறிஸ் செலுத்தவேண்டிய கடன்தொகை 322 மில்லியாட் (32200 கோடி) யூரோக்களாகும். வேலையில்லாதோர் தொகை 26%ஐ எட்டியுள்ளது. எனினும் ஐரோப்பிய ஒன்றிய வங்கிகளின் ஆதரவு-டன் பொருளாதார பிரச்சினையில் தளர்வை ஏற்படுத்த முடியும் என்றும், கடல் வழி சட்டத்திற்குப் புறம்பான குடியேற்றங்களில் கட்டுப்பாடுகளைக் கொண்டு வர முடியும் என்றும் கிறீஸ் நம்புகின்றது.



## யூரோ வலயத்தில் இணையும் லெத்தோனி

2014 ஜனவரி 1ம் திகதியில் இருந்து யூரோ வலயத்தில் லெத்தோனி (Lettonie) நாடும் இணைந்துள்ளது. இது யூரோ நாணயத்தைப் பாவிக்கும் 18வது நாடு .

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளுள் ஒன்றான லெத்தோனி, தனது பொருளா தார நலன்களிற்காக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் இணைந்ததோடு தனது நாட்டின் நாணயத்தை யூரோ ஆக மாற்றியுள்ளது. இந் நடவடிக்கையானது, லெத்தோனி ரஷ்யாவில் தங்கி இருப்பதை பெருமளவில் குறைக்கும் என்று ஐரோப்பிய நாடுகள் எண்ணுகின்றன.

லெத்தோனி அரசும் பெரு வர்த்தகர்களும் யூரோவை தங்கள் நாணயமாக ஏற்றுக் கொள்வது வெளிநாட்டு முதலீடு-களை ஈர்ப்பதற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் தூண்டுதலாக அமையும் என்று நம்புகின்றனர். ஆனால் நாட்டில் எடுத்த புள்ளிவிபரம் ஒன்றில் 60 வீதமானோர் புதிய நாணயமான யூரோவை ஏற்க விருப்பமற்றவர்களாகவே உள்ளனர் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

லெத்தோனியின் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்துகின்ற ரஷ்ய இன மக்கள் சிறுபான்மையினராக உள்ளனர். ரஷ்யா இந் நாட்டுடன் நெருக்கமான பொருளாதார உறவுகளை கொண்டுள்ளதோடு, முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளின் முதலீட்டாளர்கள் பலர் லெத்தோனி நாட்டின் வங்கிகளில் வாடிக்கையாளர்களாகவும் உள்ளனர்.

லாச்சப்பலில் சங்கீதா அச்சகம்

## சின்னட்டிக்கதை



# யானை

**தெருவில்** நடந்துகொண்டிருந்தபோது அந்த நவிகோ என் கண்ணில் பட்டது. அந்த அவரசரத்திலும் நின்று குனிந்தெடுத்தேன். அதில் அழகிய சிறுமி ஒருத்தி சிரித்துக்கொண்டிருந்தாள். ஆனாலும் சிறிதுநேரத்திற்கு மேல் என்னால் அவளை ரசிக்கமுடியவில்லை.
கோபம் கோபமாக வந்தது.

பொறுப்பில்லாமல் ரிக்கற்றை தொலைத்துவிட்டு சிரித்துக்கொண்டிருக்கிறாள். அவளுக்கென்ன? இனி அவளுடைய அப்பாவோ அல்லது அம்மாவோதான் அலைந்துதிரியவேண்டும்.

அவேயிலயும் பிழை இருக்கு. சின்னனுகளுக்கு சொல்லிக்குடுக்கவேணும். ரிக்கற் மட்டுமில்ல. ஒவ்வரு விசயமும் அப்பிடித்தான். ரிக்கற், திறப்பு, காசு இதுபோன்ற பொருட்கள தொலைக்காது எப்பிடி பாதுகாப்பாக வைத்திருப்பது என்று.
இல்லாவிட்டால் இப்படித்தான். அலையட்டும்!

எனது பஸ் வந்தது. ஏறிக்கொண்டேன்.
மனசு கேட்கவில்லை.

'..ச்சா..ரிக்கற்றை துலைத்துவிட்டு அந்தப்பிள்ளை என்ன பாடு-படுமோ? பஸ்ஸில ஏறேக்கதான் பாத்திருக்கும். அந்தக்கணம் என்ன பதை பதைத்திருக்கும்?
இதை இப்ப நான் வைத்திருந்து என்ன செய்வது?'

ட்றைவரிடம் சென்றேன்.

'உதக் கொண்டே லெற்றர் பொக்ஸ் எங்கயாவது போடு'
..ச்.. சீ.. என்ன மனுஷன் அவன். வேண்டா வெறுப்பாக அவன் சொன்ன பதிலால் எரிச்சலானேன்.

'என்னப்பா சின்னச்சின்ன விசயங்களுக்கெல்லாம் கோபப்படுறியள்?'
எனது மனைவி மண்டைக்குள் வந்தாள்.

இது என்ன சின்னப்பிரச்சினையா? அவன் ஒரு பொதுச்சேவை ஊழியன். இப்படியா பதில் சொல்றது?

எல்லாத்திலயும் ஒரு ஒழுங்கு நேர்த்தி இருக்கவேணும்.
ஒருதருக்கும் ஒண்டிலயும் பொறுப்பில்ல. ஒரு சென்ரிம் உழைக்கிறதெண்றது என்ன சின்ன விசயமே! சரி அப்பிடி கஸ்ரப்பட்டு உழைக்கிறத தேவையில்லாம வீணாக்காம ஒழுங்கா பாதுகாக்கவேணும். இந்த நாட்டில நேரமெண்றது எவ்வளவு முக்கியம். சும்மா அலையேலுமே!

பஸ்ஸைவிட்டு இறங்கினேன்.

மெத்ரோ வாசலில் ஏதிர்த்தாற்போல் தபாற்பெட்டி இருந்தது.

..ம்.. கோபத்தை கட்டுப்படுத்து... கட்டு..ப்ப..டுத்து... என்று மனது இறைஞ்சியது. அந்த நவிக்கோவை எடுத்து தபாற்பெட்டிக்குள் நுழைத்துவிட்டு சாந்தமானேன்.
இதமான குளிர்க்காற்று என்னை வருடிச்சென்றது.

மெத்ரோவிற்குள் இறங்கி இரண்டடி வைத்திருக்கமாட்டேன். திடுமுட்டாக, ரிக்கெற் செக்கேர்ஸ் வரிசையாக நின்று வழிமறித்தார்கள்.
எனக்கு என்னவோ அவர்களைக் காண சிரிப்புத்தான் வாறது.
என்னிடம் எப்போதுமே ரிக்கற் ஒழுங்காக இருக்கும். ஒரு வகைத் திமிரோடுதான் அவர்களின் மூஞ்சிக்குநேராக ரிக்கெற்றைத் தூக்கி நீட்டுவேன்.

இன்றும் அதே மாதிரித்தான். செக்கரின் முகத்துக்குநேராக நவிக்கோவை நீட்டிவிட்டு நையாண்டியாக நின்றேன்.

அவன் மேலும் கீழுமாக என்னைப்பாத்தான்.
நானும் என்னா! என்பதுபோல மேலும் கீழுமாக அவனைப்பாத்தேன்.

'மிஸ்யு, ஸா ஸெப்பா வூ' என்றான்.

அவன் எனது முகத்திற்கு நேராக திருப்பிய நவிக்கோவில் அழகிய சிறுமி ஒருத்தி சிரித்துக்கொண்டிருந்தாள்.

எனக்குத் தொண்டை வரண்டது. தெரிஞ்ச பிரெஞ்சு சொற்களும் வரமறுத்தன...

– அசோகா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருள், சிகரட், மதுபாவனை பிரான்சில் அதிகரிப்பு



**50 ஆண்டுகளிற்கு முன்னர்** பிரெஞ்சு மக்கள் சாப்பாட்டு மேசையில் ஒரு கிளாஸ் வைன் மாத்திரமே பருகி வந்தனர். சில பத்தாண்டுகளில் இந்தப் பண்பு அழிந்துவிட்டது. அண்மையில் பிரெஞ்சு மக்களிடையே தேசியரீதியில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி (Inpes-Instut National de Prévention et Education pour la Santé) போதைப்பொருள், சிகரட், மதுபாவனை பழக்கங்கள் அதிகரித்துவருவதாக அறிய முடிகின்றது.

மாலை நேர மது பாவனை 2005ம் ஆண்டில் 15% ஆக இருந்தமை தற்போது 19% ஆக அதிகரித்துள்ளது.

புகைபிடிப்போரின் தொகை 2005இல் 27% ஆக இருந்து தற்போது 29% ஆக உயர்ந்துள்ளது.
அதே வேளையில் கொக்காயின் (cocaine) போன்ற போதைப் பொருள் பாவனையும் அதிகரித்துள்ளது.

பிரான்சின் வடபகுதியில் (Nord-pas-de-Calais) வாராந்தம் 25% ஆனோர் மது பாவிக்கின்றனர். தேசிய மட்டத்தில் இத்தொகை 19% ஆகும்.

கனபிஸ் (Cannabis) போன்ற போதைப்பொருள் பாவனை ஐரோப்பிய ரீதியல் பிரான்சில் கூடுதலாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிரிக்காத நாள் இழக்கப்பட்ட நாள்

## முறைகேடான வர்த்தகப் போட்டி! கடையை மூட நீதிமன்றம் உத்தரவு! Concurrence Déloyale

முதன் முறையாக பிரான்சில் உள்ள துலுஸ் நகரில் ஈ–சிகரட் வர்த்தகநிலையமொன்று நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் மூடப்பட்டுள்ளது. ஈ–சுமோக்–கிளீன் (Esmokeclean) என்ற ஈ–சிகரட் விற்பனை செய்யும் கடை வேறொரு கடைக்கு மிக அண்மையாக திறக்கப்பட்டது.

பிரான்சில் ஒரு சில வர்த்தகங்களுக்கு, போட்டியாக வேறொரு கடையை மிக அருகில் திறப்பதற்கு தடை உள்ளது. இதன் அடிப்படையில் தொடரப்பட்ட வழக்கில் இரண்டாவதாக திறக்கப்பட்ட ஈ–சிகரட் கடையை மூடுவதற்கு நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.

பிரெஞ்சு அரசினது வர்த்தகப் பாதுகாப்பு சட்ட நியதியின்படி வழங்கப்பட்டுள்ள இத்தீர்ப்பு முறைகேடான வர்த்தகப் போட்டியாளர்களுக்கு நெருக்கடியைக் கொடுக்கும் என வழக்காளியின் சட்டத்தரணி திருப்தி தெரிவித்துள்ளார்.




## ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய விரும்பும் உக்ரைன் (Ukraine)

தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் 28 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. 01.07.2013 இல் குரோசியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தது.

சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்து சென்ற நாடுகளுள் உக்ரைன் மிகப்பெரிய நாடாகும். பரப்பளவில் உலகின் 21வது நாடாகவும் சனத்தொகையில் 29வது நாடாகவும் உள்ளது.
சோவியத் ஒன்றியத்துடன் அரசியல் பொருளாதாரரீதியாக உக்ரைன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருக்கின்றது.

ஆனால் 21 நவம்பர் 2013 இல் உக்ரைன் ஜனாதிபதி விக்ரர் லனோகோவிற்ச் (Viktor Lanoukovitch) ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவதற்கான பேச்சுவார்த்தையை முறித்துக்கொண்டுள்ளார்.

இதன்பின்னர் டிசம்பர் 1ம் திகதி கிவ் (Kiev) நகரில் உள்ள சுதந்திர சதுர்க்கத்தில் ஐந்து இலட்சம் மக்கள் ஒன்று திரண்டு ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவதற்கான தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளனர். மூன்று நாட்களின் பின்னர் உக்ரைன் நாட்டின் முன்னாள் மூன்று ஜனாதிபதிகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கான தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். இதன் பின்னர் உக்ரைன் நாட்டு ஜனாதிபதி, தொடரும் சம்பவங்கள் நாட்டின் 'தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும்' என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆனால் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்தபின்னர், உக்ரைன் சோவியத் யூனியனுடன் அரசியல், பொருளாதாரரீதியில் இணைந்து இருப்பதா அல்லது ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து கொள்வதா என்ற ஊசலாட்டத்துடன் உள்ளது.



பிரான்சின் வடபகுதியில் (Marcq-en-Ostrevent) விபத்திற்குள்ளான வாகனத்தை ஓட்டிய சாரதியை பரிசோதித்தபோது, 6 கிராம் மதுசாரம் இரத்தத்தில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவே பிரான்சில் மிக அதிகமான மதுசாரம் இரத்தத்தில் காணப்பட்ட சம்பவம் என பாதுகாப்புப் பொலிசார் தெரிவித்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிரியபோருக்கு செல்லும் பிரான்ஸ் இளைஞர்கள்

பிரான்சின் ஸ்ராஸ்பேர்க் (Strasbourg) நகரில் இருந்து சிரியாவில் நடைபெறும் « ஜிகாட் » போரிற்காக 10 இளைஞர்கள் சென்றுள்ளதாக யூறோப்–1 செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. டிசம்பர் நடுப்பகுதியில் சென்ற இவர்கள் 20 வயதை நிரம்பியவர்களாவர். இளம் போராளிகளான இவர்கள் அல்–ஹைத்தா முகாம்களை சென்றடைந்துள்ளதாகவும் இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் இளைஞர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் விடுமுறைக்கு துபாய் சென்றுள்ளதாக எண்ணியிருக்க இவர்கள் துருக்கி சென்றுள்ளனர். பின்னர் அல்–ஹைத்தா வலையமைப்பின்
உதவியுடன் பயிற்சிக்காக சிரியா முகாம்களை அடைந்துள்ளனர்.
கடந்த செப்ரம்பர் மாதம் இவ் இளைஞர்கள் சென்றுள்ளமையை பிரான்சின் உள்நாட்டு அமைச்சு உறுதிசெய்துள்ளது. பிரான்சின் உள்நாட்டு அமைச்சர் மனுவல் வால்ஸ் (Manuel Valls) இவ்விடயமாக கருத்துத் தெரிவிக்கும் போது, 130 பிரான்ஸ்நாட்டவர்கள் வரை ஜிகாட் 'புனிதப்போரிற்காக' சிரியா சென்றுள்ளதாக தெரிவித்துள்ளார். அங்கு சென்றுள்ள இவ் இளம் போராளிகளுள் பெரும்பான்மையானோர், சமூக வலைத்தளங்கள் மூலமாகவே இப்போரில் இணைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

## 20ம் நூற்றாண்டு வரலாற்று நிகழ்வுகளில்..


உங்களைப்பாதித்த அல்லது நினைவை விட்டகலாத நிகழ்வுகளைப் பட்டியலிடும்படி இணையவழியாக மேற்கொண்ட ஆய்வில் முதல் இரண்டு இடங்களையும் உலகப்போர்கள் பிடித்துள்ளன. தலைமுறைகள் கடந்தும் போர்கள் இன்றைய தலைமுறையினர் மத்தியில் கொண்டுள்ள தாக்கம் ஆய்வாளர்களை வியக்க வைத்திருக்கின்றது. பிரான்ஸ் இளம் சமூகத்தினர் வரலாறு மீது நாட்டமில்லாதவர்களாக விலகிச் செல்கின்றனர் என்ற பரவலான குற்றச்சாட்டினை இம்முடிவு மாற்றியுள்ளது. அவர்கள் வரலாற்றின் முக்கியத்துவத்தையும் அவற்றின் தன்மையையும் நன்கு அறிந்தவர்களாகவுள்ளனர் என ஆய்வாளர்கள் மேலும் வியந்துள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| 1 | 1939-1945 | இரண்டாம் உலகப்போர் | 93 %* |
| 2 | 1914-1918 | முதலாம் உலகப்போர் | 92 %* |
| 3 | 1989 | பேர்லின் மதில்த்தகர்ப்பு | 90 %* |
| 4 | 2001 | 11 செப்டெம்பர் அமெரிக்க உலக வர்த்தக மையம் மீதான தாக்குதல் | 86 %* |
| 5 | 1936 | பிரான்ஸ் மக்கள் முன்னணி பிரான்ஸ் ஏற்படுத்திய வேலை நேரக்குறைப்பு, சம்பளத்துடன் கூடிய லீவு தொடர்பான மாற்றங்கள் | 83 %* |
| 6 | 1961 | பேர்லின் மதில் கட்டுமானம் | 83 %* |
| 7 | 1973 | முதலாவது எண்ணெய் நெருக்கடி | 80 %* |
| 8 | 1946 | காலனித்துவ ஒழிப்பு 1946 இற்கு பின்னர் | 76 %* |
| 9 | 1968 | 1968 பிரான்ஸ் புரட்சி | 75 %* |
| 10 | 1999 | யூரோ நாணய வருகை | 75 %* |

# கணிதத்தில் பிரான்சுக்கு 25வது இடம்!

பிரான்ஸ் மாணவர்கள் கணிதத்தில் பின் தங்கிய நிலையில் உள்ளதாக OCDE ( Organisation de coopération et de développement économiques ) தகவல் வெளியிட்டுள்ளது. 65 நாடுகளில் பிரான்ஸ் 25வது இடத்திலுள்ளது. 2003ல் முன்னிலையிருந்த பிரான்ஸின் இப் பின்டைவுக்கு மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என மூன்று தரப்பினர்மீதும் குற்றம் சுமத்தப்படுகிறது. மெய்யியலுக்கோ ( Philosophie ) அல்லது மொழிக்கோ கொடுக்கப்படும் முன்னுரிமை கணிதத்திற்கு கொடுக்கப்படுவதில்லை. காரணம் பிரா ன்ஸ் தன்னை கலாச்சாரங்களின் தலைநகரமாக முன்னிறுத்திக்கொண்டுள்ளது. மற்றும் கணிதம் தொடர்பாக பெற்றோர்கள் குழந்தைகள் மேல் பிரயோகிக்கும் அதி கூடிய அழுத்தம் அவர்களை கணித பாடத்தின் மேல் பயத்தை, வெறுப்பை ஏற்படுத்துகிறது. இதற்கான அரிய தீர்வாக கணித பாடத்தை நாளாந்த செயற்பாடுகளுடன் ஒருமித்து, தற்போதைய இறுக்கமான முறைகளை தளர்த்தி மாணவர்களுக்கு ஆர்வத்தை தூண்டும் இலகு முறையில் புகட்டுதல் சரியான. முறையாக அமையக் கூடும் என பிரான்ஸ் கணித ஆசிரியர்கள் அமைப்பின் தலைவர் Bernard Egger தெரிவித்துள்ளார்.

இத்தரவரிசை அட்டவணைப்படி சீனா, கொரியா, ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் முதல் இடங்களிலுள்ளன. இங்கிலாந்து 26வது இடத்திலும் அமெரிக்கா 36வது இடத்திலும் கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியவை முதல் 20க்குள்ளும் இடம் பிடித்துள்ளன.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தங்கம் கையிருப்பு

## மூன்றாம் இடத்தில் பிரான்ஸ்

உலகம் முழுவதும் அண்ணளவாக 150000 தொன் ( ஒன்றரை இலட்சம் தொன் ) தங்கம் உள்ளது. இதில் அண்ணளவாக 8000 தொன் தங்கப் பாளங்களை அமெரிக்க அரசு வைத்துள்ளது. அரசுகளில் அமெரிக்க அரசே அதிகூடிய தங்கத்தை கையிருப்பில் வைத்துள்ளது.

இரண்டாவது இடத்தில் ஜேர்மனி 3391 தொன் தங்கத்தை தனது கையிருப்பில் வைத்துள்ளது. இந்த இரண்டு நாடுகளிற்கும் அடுத்ததாக பிரான்ஸ் 2435 தொன் தங்கப் பாளங்களை வைத்திருக்கின்றது.

உலக அளவில் உள்ள தங்கத்தில் அண்ணளவாக 10% மான தங்கத்தை இந்திய அரசு அல்லாமல் இந்திய மக்கள் வைத்திருக்கின்றார்கள். இதன் அளவு 15000 தொன்களாகும். பொதுமக்கள் என்ற பார்வையில் இந்திய மக்களிடமே கூடுதலான தங்கம் உள்ளது. உலக அளவில் நாணயங்களின் பெறுமதியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டு அசம்பாவிதம் ஏதும் ஏற்பட்டால் அதை ஈடு செய்யும் நோக்குடன் ஜேர்மனி தனது தங்க இருப்பில் ஒரு பகுதியை அமெரிக்காவிற்கு ஏற்கனவே மாற்றியுள்ளது. தற்போது வாசிங்டன் மற்றும் கென்டகி (Kentucky ) நகரில் இத்தங்கம் வைப்பிலிடப்பட்டுள்ளது.

ஆபத்தான வேளைகளில் இத்தங்கத்தைப் பயன்படுத்தி தேவையேற்படின் வெளிநாட்டு நாணயங்களை வாங்கும் நோக்குடன் ஜேர்மனி தங்கப்பாளங்களை அமெரிக்காவிற்கு நகர்த்தியுள்ளது. அமெரிக்காவில் இத்தங்கம் 65 சென்ரிமீற்றர் கொங்கிறிற் சுவருக்குள் 20 தொன் நிறையுள்ள கதவிற்குப் பின்னால் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.


மண்டைதீவு திருவெண்காடு
சித்திவிநாயகர்
ஆலய இணைய முகவரி
www.thiruvenkadumandaitivu.com


# பிரான்சில் நுகர்வோர் உரிமைகள்



நுகர்வுத்துறை அமைச்சர்

**நுகர்வு** ( La consommation ) தொடர்பான புதிய சட்டமூலம் பிரான்ஸ் பாராளுமன்ற ( Assemblée nationale ) ஒப்புதல் கொடுக்கப்பட்டு 17 டிசம்பர் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொருட்களையோ அல்லது சேவைகளையோ நுகர்வோருக்கான உரிமைகள் நுகர்வோர் உரிமைகள் என வரையறை செய்யப்படுகிறது. பிரான்சில் 1970 முதல் நுகர்வோர் உரிமைகள் பேணப்பட்டு வருகின்றன.

நுகர்வோர் உரிமைகளின் முக்கிய பண்புகளாக
அ) அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் உரிமை,
ஆ) நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ளும் உரிமை.
இ) பொருட்களை அல்லது சேவைகளை நுகர்வோர் அதற்கு விலை செலுத்துவதால் பொருட்கள் அல்லது சேவைகள் திருப்தியளிக்க வேண்டியது முக்கியமாகின்றது. மேலும், அவை நுகர்வோரின் உடல், உள நலம் பாதிப்படையாதவாறு திருப்தியளிக்க வேண்டியதும் அவசியமாகிறது.
ஈ) போட்டிச்சூழலில் நுகர்வோர் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்.
உ) நுகர்பொருளின் அடிப்படைத் தகவல்கள் தெரியப்படுத்தப்பட வேண்டும் என பல நடைமுறைகள் உள்ளன.

2014 முதல் நுகர்வோர் உரிமைகளில் மேலும் சில மாற்றங்கள் ஏற்படவுள்ளன.?

- காப்பீட்டு ஒப்பந்தங்கள் ( Contrats d'assurance ) ஒரு வருட காலத்திற்குப் பின்னர் நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் நிறுத்தவோ அல்லது மாற்றங்களை ஏற்படுத்தவோ முடியும்

- இதுவரை பார்மசிகளில் மட்டுமே விற்கப்பட்டு வந்த கர்ப்பப் பரிசோதனைக்கருவிகள் உட்பட மேலும் சில மருந்துவகைகளையும் தற்போது பெரு விநியோக அங்காடிகளிலும் வாங்க முடியும்.

- பிரான்சில் அளவுக்கதிகமான கடன்சுமையுள்ள தனிநபர்கள் அதிகரித்து வரும் இந்நிலையில் ஒவ்வொரு கடன் பெறுனருக்கும் தேசிய அளவில் ஒரு பதிவை ஏற்படுத்துதல். இதன் மூலம் தனிமனித கடன் சுமை அதிகரிப்பைத் தவிர்க்க முடியும்.

- வருடாவருடம் பொருளாதார நஷ்டத்தை கணக்குக் காட்டும் நிறுவனங்களுக்கு அவை மோசடிக் கணக்குகள் என அறியவரும் பட்சத்தில் அதிகளவான அபராதம் விதிக்கப்படும். உதாரணமாக அபராதத் தொகை அவர்களது வருட வருமானத்தில் 10 சதவீதமாக விதிக்கப்படும். அத்துடன் 5 வருடங்களுக்கு அந்நபர் எந்த வித வணிக நடவடிக்கைகளும் செய்ய முடியாது முடக்கப்படுவார்.

- இதுவரை, கண்ணாடி விற்பனை நிலையங்களில் மட்டும் பெறக்கூடியதாக இருந்த கண்ணாடிகளை இனி இணையங்களினுடாகவும் பெற்றுக்கொள்ளமுடியும். இதன்மூலம் 30 முதல் 40 சதவீத இலாபத்தினை நுகர்வோர் பெற்றுக்கொள்ளமுடியும்.

- வாகனத்தரிப்பிட மிகக்குறைந்த கட்டணநேரம் இதுவரை ஒருமணிநேரமாக இருந்தது. 2014 முதல் உங்கள் தேவைக்கேற்ப நிமிடக்கணக்கிலும் நீங்கள் வாகனங்களை தரித்துக் கொள்ளமுடியும்.

- உறைகுளிரில் பேணப்பட்ட உணவுகளல்லாது தினமும் புதிய உணவுகளை தயாரித்து வழங்கும் உணவகங்களுக்கு 'Fait maison' முத்திரை வழங்கப்படும். இது நுகர்வாளர் தேர்வுக்கு வசதியாகிறது.





இது சங்கீதா அச்சகத்தின் வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. பிரெஞ்சு ஜனாதிபதி விட்ட பிரெஞ்சு இலக்கணப் பெரும் பிழை

பிரான்சின் முன்னை ஜனாதிபதி நிக்கொலா சார்க்கோஷி விட்ட பிரெஞ்சுப் பிழைகளை செய்தித்தாள்கள் வெளியிட்டிருக்கின்றன. இவர் இலக்கணம் (la grammaire) மற்றும் வினைத்திரிபுகளில் ( la conjugaison) விட்ட பிழைகளையே அவை சுட்டிக்காட்டி உள்ளன. அவற்றின் திருத்தங்களையும் குறிப்பிட்டுள்ளன.

இரண்டாம் உலகப்போரின் பின், பிரான்சின் முதல் ஜனாதிபதியான சார்ள் டீ கோல் இலண்டனில் ஓர் வெற்றிப் பேருரையை ஆற்றியிருந்தார். இப்பேருரை வரலாற்றுப் பிரசித்தி பெற்றது. இவ்வெற்றி உரையின் 70 ஆண்டு நினைவை ஒட்டி இலண்டனில் நடந்த நிகழ்ச்சியில் சார்க்கோஷி உரையாற்றினார்.

போராட்ட வீரர்கள் பற்றிக் குறிப்பிடுகையில், « ..., அவர்கள் போராடினர்». என்பதை, « Ils se batturent » எனக் கூறினார். இது பெரிய இலக்கணப் பிழை ! அதுவும் பிரான்ஸ் நாட்டின் தலைவர் விடக்கூடிய தவறா ! எனப் பலர் குசுகுசுத்துக்கொள்ள, ஒரு சிலர் பகிரங்கமாகவே ஆலோசனை மடல்கள் அனுப்பினர். ஆவற்றின் தமிழாக்கம் கீழே...

இடத்தை நோக்கி, உங்கள் கண்களையும் உங்கள் விரலையும் நகர்த்துங்கள்...

Ils se batturent என்பதன் வழுவற்ற வாக்கியம் Ils se battirent என்பது ஆகும்.

· le Bescherelle என்பது பிரெஞ்சு வினைகளின் வினைத் திரிபுகளை விளக்கும் சிறிய புத்தகம் ஆகும்..

· Passé simple என்பது வரலாற்று நிகழ்வைக் குறிப்பிடுவதற்கான இறந்தகால முற்று ஆகும்.



இவ்வாறான பல இலக்கண வழுக்களுடன் ஜனாதிபதி பேசியிருக்கின்றார். அவற்றையும் Le Monde, Le Figaro போன்ற பத்திரிகைகள் சுட்டிக்காட்டி உள்ளன. இவ்வாறே முன்னாள் உயர்கல்வி அமைச்சரான Claude Allègre, பெண்ஜனாதிபதி வேட்பாளரான Ségolène Royal உம் விட்ட பிரெஞ்சு இலக்கணத் தவறுகளை le Figaro பத்திரிகை கட்டம் போட்டு வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, நம்மவர்களும் பின்வரும் வினைத்திரிபுப் பிழைகள் விடுவதைக் கேட்கக் கூடியதாக உள்ளது.

ஜனாதிபதி ஐயா, விரைவாக ஓடி, le Bescherelle வாங்கி – இந்தப் புத்தகம் அரசுக்குப் பாரிய செலவாக இராது. அதில் battre வினைச்சொல் உள்ள பக்கத்திற்கு செல்லுங்கள். ஆங்கு passé simple உள்ள.

| | வழு நிலை | வழா நிலை |
|---|---|---|
| நான் போகிறேன் | Moi aller | Je vais |
| நீ வா, நீ வருகிறாய் | toi viens | Tu viens |
| உங்களுக்குத் தெரியும் | vous connez | vous connaissez |
| என் மனைவி போய்விட்டாள் | moi femme parti | ma femme est partie |
| எனக்கு வேலை இல்லை | moi ne pa travail | Je n'ai pas de travail. |
| nationalité | Srilankais, srilankaise. indien | Srilankaise, indienne |



## 2 . சிரித்த மரம் செழிக்கும்

சிரித்த மரமும் செழிக்கும். சிரிக்கும் மனிதனின் சிரிப்பு மஞ்சள் சிரிப்பாக இருக்காத பட்சத்தில் மனிதனின் உடலும் மனமும் செழிக்கும். ஒருவர் சிரிக்கும் போது சிரிப்பானது சிரிப்பவரின் வாயின் இடது பகுதியிலிருந்து தோன்றினாலோ அல்லது வாய் சிரிக்க கண்மடல்கள் சுருங்காமல் சிரித்தாலோ அது மஞ்சள் சிரிப்பு ஆகும். அதாவது பொய்யான சிரிப்பு ! நம்மைப் பார்த்து மற்றவர்கள் வெள்ளைச் சிரிப்புச் சிரிக்கிறார்களா அல்லது மஞ்சள் சிரிப்புச் சிரிக்கிறார்களா என்பதைக் கவனித்துக் கொள்வதனால் மெய்– பொய்யைத் தெரிந்து கொள்ள முடியும். தை பிறந்து விட்டது அல்லவா ! சிரித்துப் பார்ப்போமா அல்லது சிரிப்பதைப் பார்ப்போமா ?

தேன்கூடு
பேராசிரியர் ச. சச்சிதானந்தம்
பதிவுகள்




## 3. சர்வதேச தாய்மொழி தினம்

International Mother Language Day

***La journée mondiale de langue maternelle***

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ – UNESCO 1999ஆம் ஆண்டு பெப்ரவரி 21ஆம் திகதி இடம்பெற்ற தனது 30 ஆவது அமர்வின் போது பெப்ரவரி 21ஐ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச தாய் மொழித்தினமாக கொண்டாட வேண்டும் எனப் பிரகடனம் செய்தது . அன்று தொடக்கம் தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

தாய்மொழி என்பதற்கு யுனெஸ்கோ தரும் விளக்கம்...

அ). ஒருவன் சிறுவயதில் கற்றுக்கொண்டதும், சிந்திக்கவும், கருத்துக்களைப் பரிமாறவும் இயல்பாக ஒருவனுக்கு உதவுவதும் ஆகிய ஒன்றே தாய்மொழி

ஆ). தன்னைப் பற்றியும், உலகைப் பற்றியும் கருத்துக்களை முதன் முதல் உருவாக்கவும், வெளியிடவும் உதவுவது தாய்மொழி.

இ). இவ்வாறாகப் பயன்படும் மொழி தாய்– தந்தையரின் மொழியாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை.

ஈ). ஒருவனின் வாழ்க்கையில் தாய்மொழி / கள் மாறிக்கொண்டு போகலாம்.

## 4 . பாலகனைக் காப்பாற்றிய ஞமலி



ஏழு வயதுப் பாலகனின் உயிரை வளர்ப்பு ஞமலி காப்பாற்றிய சம்பவம் அண்மையில் இடம் பெற்றிருக்கின்றது. ஃபின் எனப்படும் பாலகனின் பெற்றோர்கள் காலையில் வேலைக்குப் புறப்படும் சமயங்களில் எல்லாம் அவர்களின் ஞமலி குழந்தையைப் பராமரிக்கும் பணிப்பெண்ணைப் பார்த்து உறுமலுடன் குரைத்து வந்தது. அதன் வித்தியாசமான குரைப்பு 'ஃபின்னை இவளிடம் தனியே விட்டுவிட்டுப் போகாதேங்கோ' என்பது போல் அவனின் பெற்றோர்களுக்குத் தோன்றியது. இதனைத் தொடந்து கவனித்து வந்த பெற்றோர்கள் அப்பெண் மீது சந்தேகம் கொண்டனர்.

இதனால் வரவேற்பறைச் சோஃபாவில் கைத்தொலைபேசி ஒன்றினை மறைத்து வைத்தனர். வீடு திரும்பியதும் அத்தொலைபேசியை எடுத்துப் பார்த்த போது, தமது மகனை கையால் அடிப்பதையும், அவன் வீரிட்டு அழுவதையும் கண்டனர். கால்களை அவதானித்த போது அடித்த அடையாளங்கள் காணப்பட்டன. இருபத்திரண்டு வயதுடைய அப்பணிப்பெண்ணை போலிசிடம் ஒப்படைத்தனர். இவர் செய்ததை ஒப்புக்கொண்டதனால் நீதிமன்றம் மூன்றாண்டு சிறைவாசம் கொடுத்திருக்கின்றது.

இச்சம்பவம் கரோலின் தெற்கில் இடம்பெற்றதாக ABC News செய்தி தெரிவிக்கின்றது. மனிதனின் சிறந்த மித்திரனான நாய் பல்வேறு சந்தர்ப்பங்களில் தன்னை வளர்த்தவர்களைக் காப்பாற்றிய நன்றி மறவாச் சம்பவங்கள் பல நாடுகளில் நடந்து வருகின்றன. நாயைப் பணம் கொடுத்து வாங்கமுடியும். ஆனால் அதன் வாலாட்டலைப் பணத்தால் வாங்கிட முடியுமா !


இதுவரை 34 முதுகலை பட்டதாரிகளையும், 32 இளநிலைமானிகளையும்
5 பட்டயமானிகளையும் உருவாக்கியுள்ளோம்...

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

SRM UNIVERSITY

(ஸ்தாபிதம் : 1929 இந்தியா - 2003 பாரிஸ்)

உங்களைத் தேடிவரும் பயன். பலம் தரும் பட்டப்படிப்புக்கள்
அனுமதி - சேர்க்கைகள் இப்பொழுது நடைபெறுகின்றன

- உலக நாடுகளில் பிரபல்யமான BBA, MBA பட்டப்படிப்புகள் தமிழிலும் உண்டு.
- பரதநாட்டியம், வாய்ப்பாட்டு (சங்கீதம்) வயலின், வீணை ஆகிய நுண்கலைகளிலும் Diploma, B.A, M.A பட்டப்படிப்புக்கள் நடைபெறுகின்றன.
- ஒரே சமயத்தில் இரட்டைப்பட்டங்களுக்கான (Double Degree) படிப்புக்களையும் மேற்கொள்ள முடியும்.

**SRM UNIVERSITY**
**தமிழ்ப்பேராயம்**
தமிழ் நாட்டில் இப்பொழுது முன்னணியில் திகழும் SRM UNIVERSITY இன் பட்டப்படிப்புக்களும் தொடங்குகின்றன.

அயலகத்தமிழாசிரியர் பட்டயம்,
Diploma in Diaspora Tamil Teacher
உலகத்தின் எந்த நாட்டிலும் அங்கீகாரம் உடைய பட்டயப்படிப்பு !
ஓர் ஆண்டு பட்டயப் படிப்பு - One year Diploma Course

உங்கள் வேலை வாய்ப்புக்களை இலகுவாக்க, உயர் உத்தியோகம் பெற கல்வியறிவைப் பெற உங்கள் பெயருக்குப் பின்னால் ஓர் பல்கலைக்கழகப்பட்டம் போட வேண்டும் என்ற நீண்ட கால கனவு நனவாகப் பட்டப்படிப்பு வழி நல்கிறது.

70, rue Philippe de Girard
75018 PARIS
Tél : 01 46 07 16 00
sachchithanantham@gmail.com


**நிலா**

நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

**சங்கீதா அச்சகம்**
39, Bld. de la Chapelle - 75010 PARIS

**ரூபி அச்சகம்**
10, Rue Labat - 75018 PARIS

CHANGE MAGENTA
77, Bld. de Magenta - 75010 PARIS

ASI BOUCHERIE
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**தமிழ்ச்சோலை -பாரிஸ் 17**
M.G.A. Coiffure
20, Rue Roger Salengro - 93700 Drancy

**யாழ் இறைச்சிக்கடை**
6, Rue Perdonnet - 75010 PARIS

SACHI EDUCATION
70, rue Philippe de Girard - 75018 PARIS

NRS COIFFURE
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

**ராக ஜோதி மளிகை**
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

**மாயவர் - மொழிபெயர்ப்பு**
57, Rue Louis Blanc - 75010 Paris

MGR VIDEO
5, Rue Perdonnet - 75010 Paris

SARL VARNISHA COIFFURE
111, rue de l'Ouest - 75014 Paris

**தமிழாலயம்**
19, Rue Cail, 75010 Paris

**மாலா மளிகை**
4, Place de Salengro - Garges les Gonesse

**அறிவாலயம் புத்தகசாலை**
7, Rue Perdonnet (M°: La Chapelle)

**ஜீவனா சலூான்**
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

SHAEE CASH & CARRY
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

RESTAURANT PARADISE
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

**ஞானமணி பல்பொருள் அங்காடி**
218, Rue. Anatole Francy - 93 Drancy

**அம்பாள் ஸ்ரோஸ்**
192, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 Paris

FUN TELECOM
139, Av.de St.Ouen - M°: Pte de St. Ouen)

உன் இதயம்
ரோஜா மலராக
இருந்தால்
பேச்சில்
அதன் வாசனை
தெரியும்



இது சங்கீதா அச்சகத்தின் வெளியீடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SMIC

மணித்தியாலத்திற்கான அடிப்படை சம்பளம் 9.43 யூரோக்களிலிருந்து 9.53 யூரோக்களாக மாற்றம் பெறுகிறது. மாதத்திற்கு 12 யூரோக்கள் (Net) அதிகமாகக் கிடைக்கவுள்ளது.




## Emploi

பகுதிநேர வேலை செய்பவர்களுக்கு வாரத்திற்கு ஆகக் குறைந்த வேலை நேரமாக 24 மணி நேரங்களாக மாற்றம் பெறுகிறது.




## RSA

அரச கொடுப்பனவான RSA உதவித்தொகை 1.3 சதவீதத்தால் உயரவுள்ளது. ஒரு தனிநபருக்கு 499 யூரோக்களாகவும், குழந்தை இருப்பின் 749 யூரோவாகவும் உயரவுள்ளது.

Emploi ஐரோப்பிய யூனியன் – 2007ல் ஐரோப்பிய யூனியனில் இணைந்த பல்கேரியா மற்றும் ருமேனியா நாட்டவர்கள் பிரான்சில் வந்து வேலை செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



TABAC - 13 ஜனவரி முதல் சிகரெட் விலை 20 சதவீதத்தால் உயரவுள்ளது

Energie - மின்சார விலை 2 சதவீதத்தால் அதிகரிக்கிறது.






Timbre - சாதாரண கடிதம் மூன்று சதத்தினால் விலை அதிகரிக்கிறது. பசுமைக்கடித சேவை 0.61 யூரோவாகவும், முன்னுரிமைக்கடித சேவை 0.66 யூரோவாகவும் உயரவுள்ளது.




## Carte D'identité

அடையாள அட்டைகளின் செல்லுபடிக்காலம் இதுவரை 10 வருடங்களாக இருந்தது. தற்போது சிறுவர்கள் தவிர்த்து ஏனையோருக்கு 15 வருடங்களாக மாற்றம் பெறுகிறது.

**பொதுப்போக்குவரத்து**

மெத்ரோ ரிக்கற் 1.70 யூரோவாகவும், நவிகோ 1 முதல் 5 வரைக்கான மாதவிலை 113.20 யூரோ வாகவுமிருக்க மற்றய அனைத்து டிக்கற்களின் விலையும் 3 சதவீதத்தினால் உயர்கின்றது.







இவை தவிர TVA வரி மாற்றங்கள், ஓய்வூதியம் பெறுவோருக்கான சில மாற்றங்கள், அரச உதவித் தொகைகள் பெறுவதற்கான அடிப்படை வருமானக் கணக்கீட்டு முறை மாற்றங்கள், அரச ஊழியர்களில் ஒரு பகுதியினருக்கான மாத வருமான உயர்வு என இன்னும் சில மாற்றங்கள் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மெத்ரோ




இங்கு படத்தில் காணப்படும் முயல் மற்றும் அதனுடன் கூடிய அபாய அறிவிப்பு, மெத்ரோ வண்டிக்கதவுகளில் 1970 முதல் ஒட்டப்பட்டு வருகிறது. Lapin RATP என அழைக்கப்படும் இம்முயல் ஆரம்பத்தில் றோஸ் நிறத்திலும் பின்னர் றோஸ் மற்றும், மஞ்சள் நிறத்திலும் அழகுபடுத்தப்பட்டுள்ளது. இந்த இரண்டு நிறங்களும் சிறுவர்களின் கவனத்தைக் கவரவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

**Charonne** மெத்ரோ நிலையத்தில் '8 பெப்ரவரி 1962ல் பலியானவர்களின் நினைவாக' எனும் வாசகத்தை நீங்கள் காணலாம். அல்ஜீரியப் போரின் இறுதி அத்தியாயங்களில் பிரான்சைச் சேர்ந்த ஆயுதம் தாங்கிய தேசியவாதக் குழு OAS (L'Organisation armée secrète) முக்கிய இடம் வகித்தது. டிகோல் அரசும் அல்ஜீரிய தற்காலிக அரசும் மேற்கொண்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை எதிர்த்து பிரான்சில் பல இடங்களில் இவர்கள் குண்டு வெடிப்புத்தாக்குதல்களை மேற்கொண்டனர். இந்நேரத்தில் பிரான்ஸ் இடதுசாரிகள் OAS ஒழிக்கப்பட வேண்டும். அல்ஜீரிய சமாதானப் பேச்சு வார்த்தைகளை துரிதப்படுத்த வேண்டுமெனவும் கோரி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை மேற்கொண்டனர். ஆர்ப்பாட்ட பேரணியில் எதிர்பாராத விதமாக கலவரம் ஏற்பட்டது. பொலிசார் எதிர் நடவடிக்கையெடுத்து பேரணியினரைத் தாக்க பேரணி சிதறி அதிகமான மக்கள் Charonne மெத்ரோ நிலையத்துள் அடைக்கலம் தேடினர். அங்கு ஏற்பட்ட கை கலப்பில் 9 பேர் மரணத்தைத் தழுவ பலர் காயமடைந்தனர். இச்சம்பவம் நடந்த திகதியே 8 பெப்ரவரி 1962!




(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org